

# நீங்கள் ராஜரீக ஆசாரியர்கள்

திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர் M.A., D.D.,

# நீங்கள் இராஜரீக ஆசாரியர்கள்

ஆசிரியர்
திருமறை அறிஞர்
பாஸ்டர். **அ.கிறிஸ்டோபர்**

**அலெக்ஸ் பப்ளிகேஷன்ஸ்**
15, சக்திநகர், பல்லாவரம்,
சென்னை – 43.

FIRST EDITION : NOVEMBER 1996
RE-EDITION : MAY 1998
TOTAL COPIES : 2000
COPY RIGHT : TO AUTHOR
PRICE : Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER : T 26

**A REVISED AND RE - WRITTERN VERSION OF A BOOK BY THE SAME AUTHOR "AASAARIYANIN UDHADUGAL" PUBLISHED IN 1992.**

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SURAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**Cell : 94434 99486**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**

## அணிந்துரை

திருமறைப் பெரியார்

**REV. Dr.** யோபு ஞானப்பிரகாசம்

இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்

கோயமுத்தூர் – 641 012. தென் இந்தியா

---

ஆவிக்குரிய புத்தகங்களினால் கிறிஸ்துவ சமுதாயத்தில் புதியதொரு அசைவை உண்டாக்கிய திருமறை அறிஞர் பாஸ்டர் அ. கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறேன். பலதரப்பட்ட ஆவிக்குரிய தேவை உள்ள மக்களின் உளவேட்கையைத் தணிக்கும், இவரது எழுத்துக்கள் இனிய தமிழில், எளிய நடையில், கொள்கைப் பிடிப்பில் உறுதியோடு அமைந்திருத்தல் பாராட்டுதலுக்குரியது.

இவர் எங்கள் இ.பெ.அ. ஸ்தாபனத்தின் பெரியார் மாவட்ட மத்திய போதகராவும், ஈரோடு திருச்சபையின் ஸ்தலப் போதகராகவும் இருந்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்.

நீங்கள் இராஜரீக ஆசாரியர்கள்– என்ற புதிய பெயரில் புதிய உறுப்பெற்று வந்திருக்கும் இந்த நூலில் ஒவ்வொரு விசுவாசியின், ஊழியரின் அழைப்பைக் குறித்தும், பொறுப்பைக் குறித்தும் உள்ளான மனிதன் உணர்வடையும் வகையில் உரிய வசனங்களுடன், உகந்த உவமைகளுடன் தெளிவாக எழுதியுள்ளார்.

இவரது முந்தைய வெளியீடுகள் கிறிஸ்துவ மக்களுக்கு பெரிய ஆசீர்வாதமாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் இருந்தது போலவே இந்நூலும் அமைய நமது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து இயேசு உதவி செய்வாராக!

– ஆமென்



## என்னுரை

**என் இனிய வாசகர்களே!**

இரட்சகரின் நாமத்தில் வாழ்த்துக்கள். கிருபை உங்களோடிருப்பதாக.

நீங்கள் விசேஷித்த விதமாய் அழைக்கப்பட்டவர்கள். அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள். இந்த மண்ணுக்கும், விண்ணுக்கும் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் உடன் சுதந்தரவாளிகள். அவர் மூலமாய் பிதாவிற்கு முன் நிற்க தகுதியாக்கப்பட்ட இராஜரீக ஆசாரியர்கள்.

இந்த உன்னத அழைப்பினை உள்ளத்தில் சிந்தித்தவாறு எழுதத்துவங்கிய எனக்கு முற்றிலும் மாறுபட்ட அனுபவம் ஏற்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அவருக்கே உரித்தான முறையில் புதிய சிந்தனைகளைக் கொடுத்தார். சிலவற்றை எழுத தைரியமில்லை. ஆகிலும் ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து அனைத்தையும் அப்படியே எழுதியுள்ளேன்.

ஊழியர்களே! இப்புத்தகத்தை நீங்கள் வாசியுங்கள் உங்கள் சபையாருக்கு நீங்கள் அறிமுகம் செய்யுங்கள். விசுவாசிகளே! இப்புத்தகத்தை நீங்கள் வாசியுங்கள். உங்கள் ஊழியருக்கு வாங்கிக் கொடுங்கள்.

அன்போடும் ஜெபத்தோடும்

அவர் சேவையில்

**பாஸ்டர் அ. கிறிஸ்டோபர்**

## படைக்கிறேன்

அன்னை வயிற்றிலேயே தெரிந்தெடுத்து
ஆசையுடன் என்னைப் பிரித்தெடுத்து
இன்பமுடன் பெயர் சொல்லியழைத்து
ஈந்த நல் ஊழியத்திற்காய் ஸ்தோத்திரம்!

உண்மை உள்ளவன் என்றென்னி
ஊக்கமான கிருபைகள்பெறப் பண்ணி
எந்நாளும் வெற்றி சிறக்கப் பண்ணி
ஏந்தி வரும் தேவா ஸ்தோத்திரம்!

ஐயனே, கிருபைகளை தினமளித்தாய்
ஒன்றுமே உதவாதென்னை எழுத வைத்தாய்
ஓய்ந்து போன நேரம் உயிர்ப்பித்தாய்
ஔஷதமாய் மாற்றிடவே மிகக் கருத்தாய்
இஃதினைப் படைக்கிறேன் ஏற்றிடுவீர்!

– ஆக்கியோன்



## உள்ளடக்கம்

**அதிகாரம்**


1. ஆசாரியனின் அழைப்பு
2. ஆசாரியனின் வஸ்திரங்கள்
3. ஆசாரியனின் உதடுகள்
4. ஆசாரியன் அறிவைக் காக்க வேண்டும்
5. ஆசாரியனும் வேதமும்
6. ஆசாரியன் கர்த்தரின் தூதன்

# 1

# ஆசாரியனின் அழைப்பு

இந்த மண்ணுக்கும் விண்ணுக்கும் சொந்தக்காரராகிய நமது ஆண்டவரின் அன்புப் பிள்ளைகள் நாம். தமது கரத்தின் கிரியைகளில் மிக உன்னதமான படைப்பாகவும் தமக்குச் சொந்தமாகவும் மனிதரை உண்டாக்கினார். இந்த பிரபஞ்சத்தின் அதிபதியிடம் தங்களைத் தாங்களே விற்றுப் போட்ட மனுக்குலத்தை, தமது ஒரே பேறான குமாரனை கிரயமாகக் கொடுத்து நம்மை மீண்டும் தமக்கு சொந்தமாக்கிக் கொண்டார்.

அல்லேலூயா! நீங்கள் ஆண்டவருக்கு இருமுறை சொந்தமானீர்கள். முதற்கண் சிருஷ்டித்தபோது தேவனுக்கு சொந்தமாக இருந்தீர்கள். சிறைப்பட்டுப் போன உங்களை தேவன் கிரயத்திற்குத் திருப்பிக் கொண்ட போது மீண்டும் தேவனுக்கு சொந்தமானீர்கள் ஆக தேவனின் இரட்டை உரிமைக்குப் பாத்திரர் நீங்கள்.

உங்களைக் குறித்த தேவசித்தம் மகா உன்னதமானது. உங்கள் மேல் தேவன் வைத்துள்ள அன்பு நித்தியமானது. உங்களைக் குறித்த தேவதிட்டம் அதி அற்புதமானது. நீங்கள் உருவத்திலும் உள்ளத்திலும் ஒரே நபர்தான். ஆனால் தேவன் உங்களை எத்தனை விதமாக பார்க்கிறார் தெரியுமா? அப்பப்பா! எப்படித்தான் விவரிப்பது.





பல கோணங்களில், பல பதவிகளில் உங்களை அமரவைத்து அகமகிழுகிறார்.

உதாரணமாக 'பெண்' என்ற வார்த்தையை எடுத்துக் கொள்வோம். அவள் தன் பெற்றோருக்கு 'மகள்' அதேவேளையில் தன் கணவனுக்கு 'மனைவி' தன்பிள்ளைக்கு 'தாய்' தன் கணவனின் பெற்றோருக்கு 'மருமகள்' தன் பிள்ளைகளின் வாழ்க்கைத் துணைக்கு மாமியார். பார்த்தீர்களா! ஆள் ஒன்றுதான் அதற்குள்தான் எத்தனை உறவுகள் – உணர்வுகள் – உரிமைகள் – உறங்கும் உண்மைகள்.

அப்படியே நீங்கள் வேதவசனத்திற்குக் கீழ்ப்படியத் துவங்கிய போது **பிள்ளைகளானீர்கள்.** பரிசுத்த ஆவியை பெற்றபோது **உடன்சுதந்திரரானீர்கள்** . அவரின் இரகசிய வருகையில் **மணவாட்டியாவீர்கள்**, அவரின் ஆயிர வருட அரசாட்சியில் நீங்கள் **இராஜாக்கள்.** அது மட்டுமா? தேவன் சொல்வதைக் கவனியுங்கள். ஜீவனுள்ள தேவனுக்கு முன்பு நிற்கும் ஆசாரியர்கள் நீங்களே.

நாமா ஆசாரியர்கள்? அது எப்படி? இது போன்ற கேள்விகளுக்கு இடம் கொடுக்காதீர்கள். இஃது ஏதோ வேறு கூட்டத்தைச் சார்ந்தவர்களுக்குப் பொருந்தும் என்று எண்ணி உங்கள் நிலையை இழந்துவிடாதீர்கள்.

நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக கிறிஸ்து மாற்றியிருக்கிறார் என்ற (வெளி 1: 6) வசனத்தை வாசித்து யோசித்து பாருங்கள். நாம் இராஜாக்கள் என்பது எவ்வளவு மேன்மையானதோ அதை விட ஆசாரியர் என்பது பன்மடங்கு உன்னதமானதும், உசிதமானதுமாகும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு தனது முதலாம் நிருபத்தில் (1 பேதுரு 2 : 6) நாம் கர்த்தருக்குள் பரிசுத்த ஆசாரியக்

கூட்டமாக கட்டப்பட்டு வருகிறோம் என்றும் (1 பேதுரு 2:9) இராஜரீக ஆசாரியக் கூட்டம் என்றும் நமது அழைப்பின் உன்னத நிலையை அழகுபட எழுதுகிறார்.

எழுத்தின்படி தேவனுடைய ஆசாரிய ஊழியத்தை செய்ய நியாயப்பிரமானத்திற்குட்பட்டவர்களில் லேவி கோத்திரத்தை தெரிந்து கொண்டார். எனவே லேவிகோத்திரத்திற்கு வெளியே எவரும் ஆசாரியராக முடியாது என்பது பிரமாணம்.

இப்படியிருக்க, நியாயப்பிரமாணத்தின் கட்டுகளில் இருந்து நம்மை விடுதலையாக்கின இரட்சகராகிய இயேசு கிறிஸ்து லேவி கோத்திரத்தின் முறைமையின்படி அல்ல, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நமக்காக பிரதான ஆசாரியராய் பிதாவின் சமூகத்தில் பிரவேசித்து ஊழியம் செய்து வருகிறார்.

மாம்சத்தின்படி யூதா கோத்திரத்தில் இயேசு பிறந்தார் எனவே முன் சொன்ன பிரமானத்தின்படி அவர் ஆசாரியராக முடியாது. ஆகிலும் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி இயேசு ஆசாரியரானார். அது என்ன மெல்கிசேதேக் முறைமை? இஃது இயல்பான கேள்வி புரிந்து கொள்ள வேண்டிய விஷயம்.

லேவி கோத்திரத்தை தேவன் தமது ஆசாரிய ஊழியத்திற்கு தெரிந்துகொண்டு நிலையான பிரமாணத்தை ஏற்படுத்துவதற்கு பலநூறு ஆண்டுகட்கு முன்பு ஒரு குறிப்பிட்ட சம்பவம் ஆபிரகாமின் வாழ்க்கையில் நடைபெற்றது. பகைஞரிடம் சிக்கிக்கொண்ட லோத்துவை ஆபிரகாம் தனது ஆட்களோடு சென்று மீட்டுக் கொண்டு திரும்பி வந்தபோது மெல்கிசேதேக் என்பவர் எதிர் கொண்டு வந்து ஆபிரகாமை ஆசீர்வதித்தார்.

இந்த **மெல்கிசேதேக்கு** சாலேமின் இராஜாவாகவும், அதே வேளையில் உன்னதமான தேவனுடைய





ஆசாரியனுமாயிருந்தான் என்று எபிரேயர் 7:1 இல் எழுதப்பபட்டுள்ளது. இங்கு கோத்திரம் முதன்மைப்படுத்தப்படவில்லை. ஊழியத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. இந்த மெல்கிசேதேக் ஆபிரகாமை ஆசீர்வதித்தான்.

இஃதினைப் போலவே நியாயப்பிரமான கட்டுகளில் இருந்து நம்மை விடுதலையாக்கின நமது இரட்சகராகிய கிறிஸ்து இயேசு புறஜாதிகளாகிய நமக்கு ஆசாரிய ஊழியத்தை அங்கீகாரம் பண்ணும் பொருட்டு, மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தை அங்கீகாரம் பண்ணி. அதை மீண்டும் சிறப்பு முத்திரையிடும் வண்ணம் தாமும் லேவிக்கு வெளியே யூதாவில் உதித்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியரானார்.

இந்த மெல்கிசேதேக்கு என்ற வார்த்தையைக் குறித்து குழப்பமும் வேண்டாம், குழப்பிக் கொள்ளவும் வேண்டாம், கிறிஸ்துவும் சபையும் செய்யும் ஆசாரிய ஊழியத்தினை நியாயப்படுத்த தகுதியான தக்க உதாரணத்தை காட் டும்படி ஆவியானவர் மெல்கிசேதேக்கின் வாழ்க்கையை அழகுற எழுதியுள்ளார்.

எபிரெயர் 7:3 இல் இவன் நாட்களின் துவக்கமும் முடிவும் இல்லாதவன் என்று எழுதியுள்ளபடியால் ஏதோ ஆண்டவனின் அவதாரம் என்று எண்ணிவிடாதீர்கள். நீங்கள்கூட நாட்களின் துவக்கமும் முடிவும் இல்லாதவர்கள் தான். தொடர்ந்து வாசியுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் சபைக்கு எழுதும்போது "உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மைத் தெரிந்து கொண்டபடியே" (எபேசியர் 2:4) என்று எழுதியிருப்பதை சற்று தியானம் செய்து பாருங்கள். உங்கள் பெற்றோர் பிறப்பதற்கு முன்பு உங்கள் பாட்டன்

முப்பாட்டன் பிறப்பதற்கு முன்பு ஏன்? இந்த உலகம் உண்டாவதற்கு முன்பே இதை வாசிக்கிற தேவபிள்ளையே உன்னை தேவன் தெரிந்து கொண்டார். அப்படியானால் கிறிஸ்துவுக்குள் வாழும் உனக்கு நாட்களின் துவக்கம் இல்லையல்லவா?

அப்படியே தெசலோனிக்கேயர் 14 : 17 - ஐ வாசித்துப் பாருங்கள் பவுல் என்ன சொல்லுகிறார் தெரியுமா? நாம் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்போதும் கர்த்தரோடு கூட இருப்போம்.

அப்பப்பா! எத்துணை மகிமை இந்த மாம்ச தேகம் மாறிப்போகும் புதுமேனியோடு எப்போதும் நாம் தேவனுக்கு முன்பாக இருக்கப் போகிறோம். அப்படியானால் நமக்கு நாட்களின் முடிவு இல்லை என்பதை அறிகிறோமல்லவா.

மெல்கிசேதேக்கைப் பாருங்கள் அவனுக்கு இரட்டை ஆசீர்வாதம். அவரைப் போலவே நாம் மாறப் போகிறோம். அவன் மக்களுக்கு ராஜா. அதே சமயம் உன்னதமான தேவனுக்கு ஆசாரியன். அதைப் போலவே நமக்கும் சிலாக்கியம் அருளப்பட்டிருக்கிறது நாம் இந்த உலகத்திற்கு இராஜாவாய் இருப்போம் (ஆயிர வருட அரசாட்சியில்) அதே சமயத்தில் உன்னதமான தேவனுக்கு முன்பாக ஆசாரியராகவும் நிற்கப்போகிறோம்.

பழைய ஏற்பாட்டில் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றும் ஆசிரியர்களை தேவன் தெரிந்து கொண்ட விதத்தையும் அவர்களுக்கென பிரத்தியேகமாக தேவன் கொடுத்த பிரமாணங்களையும் கவனித்துப் பாருங்கள். அது, மிகவும் கண்டிப்பானது – ஆழமானது – அதிகாரமுள்ளது. இத்தனை மகத்துவம் இந்த ஊழியத்திற்கு இருந்தும் அப்போஸ்தலனாகிய பவுல் அஃதினை அழிந்து போகிற ஊழியம் என்கிறார். ஆனால் புதிய ஏற்பாட்டு ஆசாரிய





ஊழியத்தை மகிமையான ஊழியம் என்று போற்றுகிறார். இப்பேர்ப்பட்டகனத்திற்குரிய இஃதினை எவ்வளவு கரிசனையோடு, பரிசுத்தத்தோடு, உண்மையோடு, உத்தமத்தோடு நாம் நிறைவேற்ற வேண்டும்.

ஆபிரகாமுக்கு கர்த்தர் கொடுத்த வாக்கின்படியே யாக்கோபின் பன்னிரெண்டு குமாரரின் சந்ததிகளை எகிப்திலிருந்து விடுதலையாக்கி தேவன் கொண்டு வருகிறார். இந்தப் பன்னிரெண்டுகோத்தரத்தில் தமது பரிசுத்த ஆசாரிய ஊழியத்திற்கென லேவிகோத்திரத்தை வேறு பிரித்தார்.

இதில்தான் எத்தனை அற்புதம் விளங்குகிறதென கவனித்துப் பாருங்கள்? யார் அந்த லேவி? அவன் எப்படிப்பட்டவன்? சற்று சிந்திப்போம்.

யாக்கோபு தனது குமாரர்களை ஆசீர்வதிக்கும் போது (ஆதி 49 : 6 - 7) லேவியின் காரியங்களை யோசித்துப் பார்க்கிறான். தீனாளின் காரியத்தினிமித்தம் சீகேம் புத்திரரை லேவி கொலை செய்ததை இணைத்துப் பார்த்து ஆசீர்வதிப்பதற்கு பதிலாக லேவியை சபித்தான். அந்த லேவியைத்தான் அந்த சபிக்கப்பட்டவனின் கோத்திரத்தைத்தான் தேவன் தமது பரிசுத்த ஊழியம் செய்யத் தெரிந்து கொண்டார்.

தேவனுடைய தெரிந்து கொள்ளுதல் வேறு மனிதனுடைய தெரிந்து கொள்ளுதல் வேறு. மனிதன் பார்க்கிறவிதமாய் தேவன் பார்ப்பதுமில்லை. யோசிப்பதுமில்லை. கிரியைசெய்வதுமில்லை. தீர்க்கத்தரிசியாகிய சாமுவேல் ஈசாயின் குமாரர்களில் உயரம், அழகு, வீரம் என்று கணக்கு பார்த்து ஆளைத் தேடிக்கொண்டிருந்த வேளையில் மந்தைக்குப் பின்னே சென்ற சின்ன தாவீதையல்லவோ கர்த்தருடைய கண்கள் கண்டது.

தேவனுடைய ஊழியத்தில் சின்னவன், பெரியவன் என்பது இல்லை. தமக்கு சித்தமானவனை சித்தப்படி தெரிந்து கொள்ளுகிறார். எத்தனையோ பக்தர்கள், சுத்தர்கள் இயேசுவோடு இருந்தபோதும் புறஜாதிகளுக்கு நற்செய்தியை அறிவிக்க சபைகளைத் துன்பப்படுத்தின துரோகியாகிய சவுலைத் தெரிந்து கொண்டு பவுலாக்கி சபையைக் கட்டும் தியாகியாக மாற்றினார்.

இஃதினைப் போன்றே, சகோதரர்களால் புகழப்படும் யூதா இருக்க, கனி தரும் திராட்சையாம் யோசேப்பு இருக்க சபிக்கப்பட்ட லேவியையே தேவன் ஆசாரிய ஊழியத்திற்குத் தெரிந்து கொண்டார். இவனை தகுதி பார்த்து அழைக்காமல் தமது கிருபையின்படியே அழைத்தார்.

ஆம் தெய்வ பிள்ளையே உன் குடும்ப, மற்றும் சொந்தக் காரணங்களை வைத்து அல்ல. அவரின் மாறாத இரக்கத்தின்படியும், தயாளத்தின்படியும் நீ ஆசாரியனாக அழைக்கப்பட்டுள்ளாய்.

தேவன், லேவியைத் தெரிந்துகொள்ள தேவகிருபை முக்கியமான பங்கு வகிக்கிறது. மோசே சீனாய் மலையில் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு திரும்பிவர காலதாமதமானபோது இஸ்ரவேலர் விக்கிரக ஆராதனையினால் தங்களை கெடுத்துக்கொண்டார்கள். இந்த சீர்கெட்ட செயலில், அழைக்கப்பட்ட விடுதலை நாயகர் ஆரோன் ஓரளவு சிக்கிக் கொண்டார்.

இன்றைக்கும் மறைவான விக்கிரக ஆராதனைகள் பெரிய ஊழியக்காரர்களை சிக்க வைத்துக் கொண்டுள்ளது.

இவர்கள் மனமார இவைகளை செய்யா விட்டாலும் மக்கள் தலைவர் பதவியை இழக்க வேண்டிய நிலை வந்து விடுமோ? என்று அஞ்சி மக்களைப் பிரியப்படுத்த





விக்கிரக ஆராதனை விஷயத்தில் விவரம் தெரிந்த இவர்கள் வினயமாக நடந்து கொள்ளுகிறார்கள்.

இங்கு ஒரு வேடிக்கையான சம்பவம், ஜனங்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? மோசே வரமாட்டார். எனவே எங்களுக்கு முன்செல்லும் கடவுளை உண்டாக்க வேண்டும் என்றார்கள். எனவே இவர்களுக்காக ஆரோன் கன்றுக் குட்டியை வார்ப்பித்தான். (யாத் 32: 4) சிங்கமாகவோ, யானையாகவோ, வடிவமைத்திருக்கலாமே பின்னே ஏன் கன்றுக்குட்டியை வார்ப்பித்தான்? யோசிக்க வேண்டிய விஷயம். இதில் ஏதும் பரம இரகசியம் இல்லை.

அவர்கள் விட்டு வந்த எகிப்து தேசத்தின் மக்கள் தெய்வம் இந்தப் பசுபதி (கன்றுக்குட்டி) பெரிய விடுதலை பெற்ற பின்னும் இந்த மக்களுக்கு பாரம்பரிய கட்டுகள் பழக்க வழக்கங்கள், பழைய ஆராதனை முறைகள் இவைகளிலிருந்து விடுதலைபெற முடியாததினால் கன்றுக் குட்டியை உருவாக்கிக் கொண்டார்கள். அந்த நிலை இன்றைய திருச்சபையையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

இந்தியக் கிறிஸ்துவம் திருமறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் பார்க்கிலும் தாய்திருநாட்டின் பழக்கத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. சபைகளில் மறைமுகமாக நுழைந்து விட்ட இந்த முலாம் பூசப்பட்ட விக்கிரக ஆராதனைகளுக்கு பிரசித்தி பெற்ற சில ஆரோன்களே கட்டியம் கூறுவது வேதனைக்குரியதே.

விடுதலை என்பது என்ன? ஏதோ ஒரு அதிகாரத்திலிருந்து மாத்திரமா? அல்லவே சகல அந்தகார அடிமைத் தனத்திலிருந்துமல்லவா இப்படியிருக்க தெய்வபிள்ளையே, உங்கள் விடுதலை எப்படிப்பட்டது என்று திருவசனத்தைக் கொண்டு அமில சோதனை செய்து பாருங்கள்.

காலாவதியாகிவிட்ட அல்லது மயக்க நிலையில், மக்கள் புகழ் போதையில் சிக்கிவிட்ட சில ஆரோன்களைப் பார்த்து அது சரி இது சரி என்று ஏமாந்து போகாதே, வேத வசனத்தை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் மாத்திரமே உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.

ஆவியானவர் கூற்றுக்கும் ஆரோனின் கூற்றுக்கும் உள்ள வேறுபாட்டை கருத்தாய் வாசித்துப் பாருங்கள். சிற்பக் கருவியில் கருக்குப் பிடித்து கன்றுக்குட்டியை ஆரோன் வார்ப்பித்தான் என்று யாத்திராகமம் 32 : 4 இல் ஆவியானவர் தெளிவாக எழுதி வைத்துள்ளார். ஆனால் மோசேயிடம் ஆரோன் கூறும் வார்த்தைகளை சற்றே சிரத்தையோடு சிந்தித்துப் பாருங்கள்.

நான் பொன்னை போட்டேன் அதிலிருந்து கன்றுக்குட்டி வந்தது. (யாத்திராகமம் 32.2) எத்தனை அப்பட்டமான அக்மார்க் பொய் பார்த்தீர்களா? தான் தப்பித்துக் கொள்வதற்கு எவ்வளவு நயமான வார்த்தைகள். கவனியுங்கள் இவன் பொன்னைப் போட்டானாம் கன்றுக் குட்டி வந்ததாம். அப்பப்பா. நம்ம ஊர் புராணங்களை மிஞ்சும் கற்பனையில் ஆரோன் மூழ்கிவிட்டார் அல்லவா.

இதே நிலைதான் இன்றைக்கும் தொடர்கிறது தாங்கள் செய்யும் தவறுகளுக்கு தங்களுக்கே உரித்தான முறையில் வியாக்கியானம் செய்யும் வேத விற்பன்னர்களாகிய ஆரோன்கள் பெருகிவிட்டார்கள். இப்படிப்பட்ட ஆரோன்கள் மக்களை என்ன செய்கிறார்கள் தெரியுமா? ஆரோன் ஜனங்களை நிர்வாணமாக்கியிருந்தான் என்று யாத்திராகமம் 32:25 இல் எழுதப்பட்ட வசனத்தின்படி சபையிலும் சத்தியத்திலும் வளர்ந்து கொண்டிருக்கும் பேதையான ஆத்துமாக்களை நிர்வாணமாக்கி, அவர்களின் இரட்சிப்பின் வஸ்திரத்தை சரிய வைத்து பரிசுத்த வஸ்திரங்களை உரித்து விடுகிறார்கள். உங்கள் சகவாசம்





எப்படிபட்டது? சரியாய்யோசியுங்கள்.

இங்கு மற்றொன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலருக்கு பொன்னுடைமைகளையும், ஆபரணங்களையும் அண்டை அயலகத்தார் அள்ளிக் கொடுத்தார்கள், அடிமைகளாயிருந்த இஸ்ரவேலர் ஐசுவரியவான்களாகப் புறப்பட்டார்கள். ஆனால் (யாத் 12: 22) அந்த ஐசுவரியத்தை எப்படிப் பயன்படுத்தினார்கள் என்பதுதான் முக்கியம்.

ஜனங்கள் பொன் ஆபரணங்களை ஆரோனிடம் கொடுத்தார்கள் என்று யாத்திராகமம் 32: 3 இலும் ஜனங்கள் பொன்னை மோசேயினிடத்தில் கொடுத்தார்கள் என்று யாத் 35:22 இலும் சொல்லப்பட்டதை சிந்தியுங்கள். ஒரே பொருளைத்தான் இரண்டு கூட்டத்தினரும் வாரிக் கொடுத்தார்கள்.

ஆரோனிடம் கொடுத்த பொன், கன்றுக்குட்டியாக மாறி விக்கிரக ஆராதனையை ஏற்படுத்தியது. மோசேயிடம் கொடுத்த பொன், ஆசரிப்புக் கூடாரமாய் மாறி பரிசுத்த ஆராதனையை ஏற்படுத்தியது. யார் கேட்டாலும் வாரி வாரி வழங்கும் தெய்வபிள்ளையே நீங்கள் காணிக்கை கொடுப்பதிலும் தேவசித்தத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தங்களை வளர்க்க தங்களை நிலைப்படுத்த நூதனமான அறிவிப்புக் கொடுக்கும் விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். உங்களாலே ஒரு கன்றுக்குட்டி உருவாகிவிடும். நீங்கள் கொடுக்கும் காணிக்கை கர்த்தரின் மகிமையை இறங்கவைக்கிறதா அல்லது கர்த்தரின் மகிமையை விலக்கி மனிதரின் மகிமையை வளர்க்கிறதா?

யாத்திராகமம் 35 : 21, 22 -இல் ஏவப்பட்டு ஆவியின் உற்சாகத்துடன் மோசேயின் செயல் திட்டத்திற்கு

(தேவசித்தின்படி உண்டாகும்) வாரிக் கொடுத்தவர்கள் தேவாலயத்தை உருவாக்கின மகிழ்ச்சியையும் அதனால் உண்டான ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

மலையிலிருந்து இறங்கி வந்த மோசேயின் வார்த்தையைக் கேட்டு விக்கிரக ஆராதனை செய்தவர்களை லேவி புத்திரர் பாரபட்சமின்றி பட்டயத்தினால் கொன்று போட்டார்கள். இங்கே ஒரு முக்கியமான காரியத்தை கவனியுங்கள். விக்கிரகத்தை வணங்கியவர்கள் மாண்டு போனார்கள். விக்கிரகத்தை செய்த ஆரோனோ தப்பித்துக் கொண்டான்.

ஆவிக்குரிய தலைவர்களைப் பார்த்து ஏமாந்து போகாதீர்கள். தப்பு செய்யும் அநேகர் தப்பித்துக்கொள்ளும் கலையை நன்றாகக் கற்றுக் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட பல ஆரோன்களை நீங்கள் இனம் கண்டு கொள்ளவேண்டும். ஊழியர்கள் இப்படி இருக்கிறார்களே, ஊழியரின் மனைவி இப்படியிருக்கிறாரே என்று அவர்கள் வழி சென்றுவிடாதீர்கள். அவர்கள் தப்பித்துக் கொண்டு உங்களை நடுவழியில் கழற்றி விட்டு விடுவார்கள்.

நான் எங்கேயோ போய்விட்டேன், திரும்ப நமது வழிக்கு வருவோம். மோசே மலையின் மேலிருந்து பிரமாணங்களை வாங்கிக் கொண்டு வரும் போது கீழே ஆடல் பாடல் சத்தம் கேட்கிறது. அது விக்கிரங்களுக்கு முன்பு ஜனங்கள் ஆடும் (பாடும்) சத்தம் மோசே இறங்கி வந்து கர்த்தரின் பட்சத்தில் நிற்பது யார்? என்று சவால் விடுகிறார்.

முதல் குமாரன் ரூபனும் வரவில்லை முதற்கொடி பிடிக்கும் யூதாவும் வரவில்லை. இரட்டை நன்மைகள் பெற்ற யோசேப்பும் வரவில்லை. வெகுண்டு எழுந்து வந்ததோ லேவி கோத்திரம். யார் அந்த லேவி கோத்திரம்? மீண்டும் வாசித்துப் பாருங்கள் ஆதியாகமம் 49:5,7 வசனங்களை, தனது பொல்லாத கிரியையினால் தகப்பனாகிய





யாக்கோபினிடத்தில் சாபத்தை வாங்கிக் கொண்டவன் தான் இந்த லேவி, யாக்கோபின் சுதந்திரத்திலிருந்து இவர்கள் பிரிந்து போவார்களாக என்று யாக்கோபே சபித்திருக்கிறார்.

நடந்ததை பாருங்கள், சபிக்கப்பட்ட லேவி கர்த்தருக்கென்று வைராக்கியங்கொண்டபடியால் நிலைமை தலைகீழாக மாறியது. இஸ்ரவேலிலே சாபத்துக்குள்ளானவனை இஸ்ரவேலை ஆசீர்வதிக்கும் கோத்திரமாக மாறினார்.

அதேவேளையில் யாக்கோபு சொன்ன கடைசிக் கால (சாப) வார்த்தைகள் (ஆசீர்வாதமாக) நிறைவேறியது. அவர்கள் யாக்கோபை விட்டுப் பிரிந்தார்கள் இஃது நடந்த உண்மை. ஆனால் கர்த்தரே அவர்கள் பங்காகவும் சுதந்தரமாகவும் மாறினார். இஃதுதான் எத்தனை மேன்மை.

எனக்கன்பானவர்களே! நீங்கள் மிகுந்த நெருக்கத்திலிருக்கலாம். சாபத்திலிருக்கலாம். சாபவிமோச்சனமே கிடைக்காதா என்று ஏங்கித் தவிக்கலாம். கவலையை விடுங்கள். கண்ணீரைத்துடைத்துக் கொள்ளுங்கள் கர்த்தருக்கு முன்பு நீங்கள் விலையேறப் பெற்றவர்கள். சபிக்கப்பட்ட லேவியை ஆசீர்வதித்தது மாத்திரமல்ல ஆசீர்வதிக்கிறவனாய் மாற்றியதுபோல உங்களையும் உங்கள் சந்ததியையும் தேவன் ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றுவார்.

நீண்ட காலமாய் ஊறிப்போய்விட்ட உங்கள் பழக்க வழக்கங்களினால் சோர்ந்து விடாதீர்கள் உங்கள் பொல்லாத சுபாவங்களைக் கண்டு மனந்தளர்ந்து விடாதீர்கள். நீங்கள் நிச்சயமாகவே தேவனுக்குப்பயன்பட முடியும். காரணம் **தேவன் தகுதி பார்த்து பொறுப்பைக் கொடுக்கிறவரல்ல. நம்மைத் தகுதிபடுத்தி பொறுப்பைக் கொடுக்கிறவர்.**

இங்கே ஒரு காரியத்தைக் கூர்ந்து கவனித்தும் பாருங்கள். லேவிக்கும் பட்டயத்துக்கும் நிறைய தொடர்புண்டு என்று நினைக்கிறேன். சீகேம் புத்திரர் சங்கதியில் பட்டயத்தை எடுத்த இவர்கள் தகப்பனிடத்தில் சாபத்தை வாங்கிக்கொண்டர்கள். மீண்டும் லேவி கோத்திரத்தின் கையில் சீனாயின் அடிவாரத்தில்பட்டயம் ஏறுகிறது. இங்கோ அவர்களுக்கு ஆசீர்வாதம் இறங்கியது மீண்டும் பட்டயம் கையில் எதற்கு? மனிதரை வெட்டவா? அல்ல பலிக்கு வந்த மிருகங்களை வெட்டிடவே.

இதிலிருந்து என்ன தெரிகிறது? எப்படிப்பட்ட மனிதனையும் அவன் போக்கிலேயே விட்டுப்பிடித்து தனது போக்கிற்கேற்ப அவனை வலம்வரச் செய்யவல்லமை பொருந்தியவர் நம்முடைய ஆண்டவரன்றோ?

எழுதும்போதே எண்ணிப்பார்க்கிறேன், படிக்கும் வயதிலேயே பேசுவதிலும், எழுதுவதிலும் ஆர்வம் கொண்ட என்னை அங்கேயே பயிற்றுவித்து ஏற்ற வேளையிலே தேவன் என்னைத் தொட்டதினால் இன்று அவருக்காய் பேசுகிறேன், எழுதுகிறேன். அப்படியில்லா விட்டால் இந்த நாசபுரிக்கு நாவினாலும், பேனாவினாலும் நகை அலங்காரம் செய்து கொண்டிருப்பேன்.

மோசேயை அரண்மனையில் அமர வைத்து அனைத்து தர்க்க சாஸ்திரங்களையும் அனுபவப் பூர்வமாய் கற்றுக் கொள்ள வைத்து அவரின் வேளை வந்தபோது அற்புதமாய் ஆபத்தில்லாமல் வேறுபிரித்து, அனுபவங்களை அவரின் மகத்துவமுள்ள சேவைக்கு ஏற்ற விதமாய் திசைமாற்றி உருமாற்றி மீண்டும் எகிப்துக்கே அனுப்பி வைத்து ஈடில்லாத இரட்சண்யத்தை உண்டாக்கினது போலவே, நம்மையும் இந்த உலகம் என்னும் உலைக்களத்தில் உழல வைத்து உருக்கி, உருவாக்கி உன்னதமான ஊழியத்தை செய்ய உத்வேகத்தை தருகிறார்.





தேவன் நம்மை ஆசாரியர்களாக்கியது நாம் மிகச் சிறந்த ஞானிகள் என்றோ, பக்தர்கள் – சுத்தர்கள் என்றோ நினைத்து அல்ல, நம் தாழ்வில் நினைத்து தமது தயாளத்தின்படி மனதிரங்கி இந்த உன்னதமான பொறுப்பை உன்னதர் நமதுவசத்தில் ஒப்படைத்துள்ளார். நம்மை குறித்து குறைவான மதிப்பைக் காட்டுவதும் நான் ஒன்றுமில்லை என்று தனக்குத்தானே நினைக்க வைப்பதும் சாத்தானுடைய மிகப் பெரிய ஆயுதமாகும், இப்படி சிந்திக்க வைத்தே உங்களை சிறைபடுத்தி ஒரு மூலையில் சாத்தான் உட்கார வைத்து விடுகிறான்.

நீங்கள் ஒன்றுமில்லை என்பது உண்மையானாலும் எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிற ஆண்டவர் உங்களுக்குள் இருக்கிற படியால் நீங்கள் அசாத்தியமான மனிதர், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியர், மறந்து விடாதீர்கள்.

பட்டம் பகட்டு என்று பார்த்து ஊழியத்தின் பொறுப்பை மனிதர்கள் ஒரு சிலருக்கு ஒரு வேளை கொடுக்கலாம். அதற்காக நீங்கள் சோர்ந்து போகாதிருங்கள், ஈசாயின் குமாரருள் பலசாலிகளை தேடின சாமுவேல் போல முகத்தைப் பார்க்கிற ஆவிக்குரிய கூட்டம் இருந்தாலும் கவலைப்படாதீர்கள். மந்தையிலிருக்கிற தாவீதைத் தேடின ஆவியானவருடைய கண்கள் உங்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. நீங்கள் அவரால் கனம் பெறப்போகிற ஆவிக்குரிய ஆசாரியர்.

பன்னிரெண்டாம் நபரைக் கண்டுபிடிக்கிற குழப்பத்தில் ஓட்டுப் போட்டு (சீட்டுப் போட்டு) தேர்ந்தெடுக்கிற அப்போஸ்தலக் கூட்டம் இருந்தாலும், இவனா? என்று கடந்த காலத்தைக் காட்டி குற்றப்படுத்துகிற சில குணாளர் முன்பு, புற ஜாதிகளுக்கென நான் தெரிந்து கொண்ட

பாத்திரம் இவன்தான் என பவுலை அடையாளம் காட்டின ஆவியானவரின் கண்கள் உங்கள் மேல் இருக்கிறது களிப்படையுங்கள். களைப்பை போக்குங்கள், தேவனுடைய கிருபையின் படி அழைக்கப்பட்ட ஆசாரியர் நீங்கள்தான்.

ஆசாரியர்களாக நாம் மாறியதும் மாற்றப்பட்டதும் சுத்த கிருபை என்றாலும் இந்தக் கிருபை எல்லோர்மேலும் இறங்குவதில்லை. யாக்கோபுக்கு பிறந்த மற்ற பதினொரு குமாரரில் விசேஷித்தவர் உட்பட எவர் மேலும் இறங்காமல் இந்த லேவியின் மேல் மாத்திரம் இறங்கியதன் அவசியமென்ன? ஆசாரியப்பட்டம் லேவிக்கு கிருபையாய் கிடைக்கப் பெற்றாலும் அந்தக் கிருபையைப் பெற லேவியிடம் கிரியை இருந்தது. ஆக இவ்விடத்தில் லேவியின் கிரியை தேவனிடத்திலிருந்து கிருபையை இறக்கியது.

மோசேயின் சவாலை ஏற்றுக் கொண்ட லேவி கோத்திரத்தார் தமது சகோதரர் என்றும் பாராமல் பட்டயத்தினால் சங்காரம் பண்ணினார்கள். இந்த நேர்மையையும் பக்தி வைராக்கியத்தையும் தேவன் பார்த்து நெகிழ்ந்து போய் ஆசாரிய அழைப்பை அவர்களுக்கு அளித்தார்.

ஆகவே கிருபை பெருகும்போது கிரியையினால் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். மாயையைப் பின்பற்றுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப்போக்கடிக்கிறார்கள் (யோனா 2:8) என்ற வார்த்தையை நினைவில் கொண்டு கிருபையைக் காக்க மாயையான வழிகளை விட்டு மன்னவரின் திருவுள சித்தத்தை செய்ய மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுங்கள்.



# 2

# ஆசாரியனின் வஸ்திரங்கள்

இந்த உலகத்தின் முக்கியஸ்தர்களை சற்றே நோக்கிப் பாருங்கள். அவர்கள் தங்கள் நிலைகளை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொள்ள வித்தியாசமான உடை அலங்காரத்தை தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள்.

மாநில காவல்துறை, தேசிய பாதுகாப்பு படைகள், மருத்துவத் தாதியர்கள் என ஒவ்வொரு கூட்டமும் தனித்தனி உடை அலங்காரத்தை கடைபிடிக்கிறார்கள்.

இதைப்போலவே எல்லா இஸ்ரவேல் மக்களினின்றும் லேவியர் கூட்டத்தினின்றும் ஆசாரியரை வேறுபடுத்திக் காட்ட ஒரு குறிப்பிட்ட வஸ்திர ஒழுங்கு முறையை தேவன் ஏற்படுத்தினார். அந்த வஸ்திரங்கள் அலங்கார வஸ்திரங்கள் மாத்திரமல்ல, பரிசுத்த வஸ்திரங்கள் என்று தேவனே சொல்லியுள்ளார்.

இந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளும் முன்பு ஆசாரியன் சில தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அதுமட்டுமல்ல, வஸ்திரங்களை உடுத்தியிருக்கும்

வேளையில், சில பிரத்தியேகப் பிரமாணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என தேவன் கட்டளையிட்டிருந்தார்.

மகிமையின் ஆசாரியர்களாகிய நாம் இந்தக் காரியத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். கவனித்தவைகளை கடைபிடிக்க வேண்டும். உலகத்தார் முன்பு நம்மைப் பிரித்துக் காட்ட, வித்தியாசமான வஸ்திரங்களை உங்களுக்கு பரிந்துரை செய்யப் போகிறேன் என்று நீங்கள் தவறாக எண்ணிவிடக்கூடாது.

வஸ்திரங்களில் நாம் வேறுபாடு காண்பிக்க வேண்டியது அவசியமே, ஆகிலும் இங்கு நான் குறிப்பிடுகிற ஆசாரிய வஸ்திரம் என்பது எழுத்திற்குரிய விளக்கத்தின் படியல்ல. ஆவிக்குரியபடி விளங்கிக் கொள்ளவேண்டியதாகும்.

பழைய ஏற்பாட்டு பக்தர்கள் இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்படுகிறது போல நம்மையும் ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்று வேதம் விளிக்கிறது. பழைய ஏற்பாட்டு ஆசாரியர் அழிந்து போகும் ஊழியத்தின் ஆசாரியர். நாம் மகிமையான ஆசாரியர். எனவே, ஆசாரிய வஸ்திரங்களை முன் நிறுத்தி மகிமையைக் குறித்தே சிந்திக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

லேவியர் எட்டாம் அதிகாரம் ஆறு முதல் ஒன்பது வசனங்கள் வரை சொல்லப்பட்ட பட்டியலை சற்றே கவனித்துப் பாருங்கள். கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட படியே மோசே ஆரோனையும் வரவழைத்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து அவனுக்கு,

1. உள்ளங்கியைப் போட்டு
2. இடைக்கச்யைக் கட்டி
3. மேலங்கியை உடுத்தி





4. ஏபோத்தைத் தரித்து
5. மார்ப்பதக்கத்தை அணிவித்து
6. ஊரீம் – தும்மீம் என்பவைகளை வைத்து
7. தலைப்பாகையை தரித்து
8. கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் பொற்பட்டத்தை கட்டினான்.

ஆசாரியன் வஸ்திரத்தில் இந்த எட்டுக் காரியங்களும் மிகவும் முக்கியமானவைகளே, இவற்றுடன் வேறு சில இணைப்புகளும் உண்டு. தேவப் பிள்ளைகளாகிய நாம் இந்தப் பரிசுத்த வஸ்திரங்களின் ஆவிக்குரிய தன்மைகளைத் தரித்திருந்தல்அவசியம்.

## 1. உள்ளங்கி

ஆசாரியன் நடக்கும்போதும், படிகளில் ஏறும் போதும், இறங்கும் போதும் அவன் நிர்வாணம் காணக் கூடாது. என்பதற்காக முதலாவது உள்ளங்கியை அணிய வேண்டும்.

நாம் உடுத்துகிற புறம்பான வஸ்திரத்தை மற்றவர்கள் பார்க்கிறார்கள்– புகழுகிறார்கள். அதன் பொருட்டு நம்மை கனப்படுத்தவும் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் காணக்கூடாத வஸ்திரம் நமது உள்ளாடைகள் (உள்ளங்கி) அதன் நிலை, தூய்மை, நமக்கு மட்டும் தான் தெரியும். அதை உடுத்தாவிட்டால் நிர்வாணம் வெளிப்பட்டு நாம்வெட்கப்பட்டுப் போவோம் அல்லவா?

அதைப் போலவே நமது மேலங்கிகள் புறம்பான, வெளிப்படையான பரிசுத்தத்தைக் காண்பிக்கிறது. அதே வேளையில், நமது உள்ளாடைகள் நமது உள்ளான மனிதன், அந்தரங்க வாழ்வின் தூய்மை எப்படியுள்ளது என்பதற்கு நிழலாய் இருக்கிறது.

உள்ளங்கி – உள்ளான பரிசுத்தத்திற்கு அடையாளம். சிலர் இதை உடுத்துவதில்லை. சிலர் பழுதாய்ப் போனவைகளை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள். புறம்பான பரிசுத்தத்தைப் பார்த்து மக்கள் நம்மைப் புகழலாம். ஆனால் கர்த்தரோ நமது இருதயத்தை பார்க்கிறார் என்பதை உங்கள் சிந்தையில் வையுங்கள்.

உன் நிர்வாணம் காணக் கூடாதபடிக்கு, எச்சரிக்கையாயிரு என்று கர்த்தர் சொல்லுகிறார்.

***நடக்கும் போதும்,***

***படிகளில் ஏறும்போதும்,***

***படிகளில் இறங்கும்போதும்.***

நிர்வாணம் காணக்கூடாது. சமுதாயத்தில் பழகும்போது, வெளியில் செல்லும்போதும், வீடு திரும்பும்போதும் நமது உள்ளான பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்.

உள்ளான வாழ்வில் தூய்மையில்லாமல் எவ்வளவுதான் உங்கள் வாழ்வில் பிரதிஷ்டையின் அனுபவங்கள் இருந்தாலும், அது உங்களைக் காப்பாற்றாது என்பதனை உங்கள் சிந்தையில் வையுங்கள். பழைய மனிதனைக் களைந்து போட்டு, புதிய மனிதனைத் தரித்துக்கொண்டு உங்களை பரிசுத்தத்தில் பலப்படுங்கள், நிலைத்திருங்கள்.

## 2. இடைக்கச்சை

உள்ளங்கியை உடுத்தி, அதன்மேல் இடைக்கச்சையை கட்டவேண்டும். இது கவனிக்கப்பட வேண்டிய ஒரு காரியம், கச்சையை கட்டாவிட்டால், உள்ளாடை வழுவிப்போக வாய்ப்பு உண்டு.

அநேகர் தங்கள் உள்ளான பரிசுத்தத்தைதி ஏரென இழந்து போனதற்குக் காரணம், அவர்கள் தங்கள்





உள்ளங்கியின் மேல் கச்சையைக் கட்டவில்லை என்பது தான் உண்மை.

எபேசியர் ஆறாம் அதிகாரம் பதிநான்காம் வசனத்தில் சத்தியம் என்னும் கச்சை என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. எந்த மனிதன் தனது பரிசுத்த வாழ்வை சத்தியமாகிய வேத வசனத்தைக் கொண்டு கட்டுகிறானோ, அவன் விழுந்துபோவதும் இல்லை வீழ்ந்துபோவதும் இல்லை.

அநேகர் இரட்சிக்கப்படுகிறார்கள். ஆனால், வெகு சீக்கிரத்தில் பின் வாங்கிப்போய் விடுகிறார்கள். அதற்குக்காரணம், அவர்கள் அடுத்துச் செய்ய வேண்டிய காரியத்தில் அசதியாயிருந்ததே ஆகும். தங்கள் அறையில் சத்தியம் என்னும் கச்சையைக் கட்டாமல் விட்டதே அவர்களுக்கு ஆபத்துக்கு ஏதுவாய் அமைந்தது.

வசனம் மனிதனுக்கு ஜீவ அப்பமாய், ஜீவத்தண்ணீராய், கருக்குள்ள பட்டயமாய், தீபமாய் இருக்கிறது. அதைத் தேடுகிறவன் வளர்கிறான், வாழ்கிறான், ஜெயிக்கிறான், முன்னேறுகிறான். எனவே, வசனத்தை வாசியுங்கள். அதன்படி உங்கள் வாழ்வைக் கட்டுங்கள். அப்போது உங்கள் உள்ளான பரிசுத்தம் நிலைக்கும்.

## 3. மேலங்கி

உள்ளங்கி, இடைக்கச்சை இவைகளுக்கு மேலே ஒரு அங்கி அணிய வேண்டும். அது தான் **மேலங்கி.** இது வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்ட அங்கி. கழுத்து நுழையும் அளவிற்கு மாத்திரம் திறப்பு இருக்க வேண்டும். அதை உடுத்திக் கொண்டு அங்கியின் கழுத்துப் பகுதியில் உள்ள நாடாவை இழுத்து, இறுக்கமாக அணிய வேண்டும் (யாத் 28 : 32)

இது இள நீல நூலால் ஆயத்தமாக்கப்பட்டது. மட்டுமல்ல, அதன் கீழ் ஓரங்களில் இரத்தாம்பரம் – சிவப்புநூலால் செய்யப்பட்ட மாதுளப் பழங்கள் தொங்க விடப்பட்டு இருக்கும். மாதுளப்பழங்களுக்கு இடையில் பொன்மணிகள் தொங்கவிடப்பட்டு இருக்கும்.

இங்கே ஒன்றைக் கவனியுங்கள் "**அவன் சாகாத படிக்கு அதில் சத்தங்கள் (பொன்மணிச் சத்தம்) கேட்கும்படி அதைத் தரித்துக் கொள்ள வேண்டும்**" – (யாத் 28:35)

இளநீலநூல் கிறிஸ்துவின் தெய்வீக அன்பின் சுபாவத்தையும், மாதுளப்பழங்கள் பரிசுத்த ஆவியின் மூலம் வருகின்ற கனிதரும் ஜீவியத்தையும், பொன்மணிகள் வெளிப்படையான ஆவிக்குரிய கிரியைகளையும் காண்பிக்கிறது.

ஆசாரியன் மகாப்பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து ஊழியம் செய்யும்பொழுது நடந்துகொண்டே ஊழியம் செய்ய வேண்டும். அப்பொழுது அந்தப் பொன்மணிகளின் சத்தம் வெளியே நிற்பவர்களுக்கு கேட்கும். இந்த மணிகளின் சத்தத்தை வைத்துத்தான் நமது ஆசாரியன் உயிருடன் ஊழியம் செய்கிறான் என்று அறிந்து கொள்வார்கள், அப்படி மணிச்சத்தம் கேட்கவில்லையென்றால், அவன் மரித்துப் போய்விட்டான் என்று பொருள்.

கிறிஸ்துவின் அன்பும், கனிதரும் ஜீவியமும். நமக்கு அவசியம். பரிசுத்த ஆவியின் வரங்களின் கிரியைகளும், நவமான பாஷைகளும், பொன்மணிச் சத்தத்திற்கு நிழலாய் இருக்கிறது. அந்தச் சத்தங்கள் கேட்கவில்லையென்றால், அவன் செத்த கிறிஸ்தவன் என்று பொருள்.

## 4. ஏபோத்து

இது விசித்திரமாக செய்யப்பட்ட அலங்கார ஆடை பொன், இளநீல நூல், இரத்தாம்பரநூல், சிவப்பு நூல்,





திரித்த மெல்லிய பஞ்சுநூல் ஆகியவற்றால் செய்யப்பட்டது. இது ஐவகையான இழைகளால் செய்யப்பட்டது. இஃது அவருடைய விசுவாசிகளுக்கு அருளுகிற விசுவாசம், அன்பு, அதிகாரம், பாடுகள், பரிசுத்தம் என்ற ஐவகை காரியங்களின் பங்கைக் குறிக்கிறது.

இராஜரீக ஆசாரியர்களாகிய நாம் கிறிஸ்துவாகிய நம்முடைய பிரதான ஆசாரியர் அணிந்திருந்தது போல இந்த ஏபோத்தை அணிந்திருத்தல் வேண்டும். இந்த ஏபோத்து அடித்தும், இழைத்தும், சீராக்கப்பட்ட பொன் மற்றும் நூல்களினால் உருவாக்கப்பட்டது போலவே தேவன் நம்மையும் பல்வேறு விதமான சோதனை வேதனை இடுக்கண் இவைகளினுடனே நம்மை நடத்தி உருவாக்குகிறார்.

ஏபோத்திலிருந்த பொன் இழை பரீட்சிக்கப்பட்ட நம்முடைய விசுவாசத்தைக் காண்பிக்கிறது. வேதத்திலும் ஆவிக்குரிய உலகத்திலும் பரீட்சைக்கு நில்லாமல் போன பலரை நாம் பார்க்கலாம். நம்முடைய விசுவாசம் பொன்னை போல சோதிக்கப்படுகிற பல வேளைகள் நமக்கு வரும். விசுவாசத்தைக் காண்பது அரிது என்று வேதத்தில் சொல்லப்பட்டபடி அநேகர் விசுவாசத்தை இழந்து போகக்கூடிய நிலை வரும். முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான். எனவே விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுங்கள்.

இளநீல நூல் தேவ அன்பின் பூரணத்தைக் காண்பிக்கிறது. தேவ அன்பு நம்மில் இருக்குமானால், தேவனை எவ்வளவு நேசிக்கிறோமோ அந்த அளவிற்கு தேவ ஜனத்தையும் நேசிப்போம். இன்றைய நாட்களில் இந்த அன்பு கூருதல் என்பது சுருங்கிப்போவதைக் குறித்து நான்வேதனைப் படுகிறேன்.

நான் ஓர் ஆசாரியன். இந்த ஜனங்களோடு கலந்திருக்கக் கூடாது என்று பிரிந்து போகப் பிரியப்படுகிறார்களே தவிர, நான் ஒரு ஆசாரியன். இந்த ஜனத்திற்காக பரிந்து பேச அழைக்கப்பட்டவன் என்று அன்பினால் நிற்கும் மக்களைக் காண்பது மிகவும் அரிதாயிருக்கிறது.

ரோமர் 5:5 ன்படி நமக்கு அருளப்பட்டிருக்கிற பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயத்திலே ஊற்றப்பட்டிருக்கிறது. அந்த அன்பை மக்களோடு பகிர்ந்து கொள்ளவே தேவன் நம்மை ஆசாரியர்களாய் மாற்றியிருக்கிறார்.

சத்துருக்களை சிநேகியுங்கள் என்று கிறிஸ்து சொன்னார். குறைந்த பட்சம் சபையாரையாவது நேசியுங்கள் என்று சொல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலை இன்று நிலவி வருகிறது.

பிரியமானவர்களே! நீங்கள் அன்பின் பூரணத்தை எட்ட வேண்டுமானால் கிறிஸ்துவை, கிறிஸ்துவினுடையவர்களை நேசிப்பதுடன், இந்த உலக மக்களையும் நாம் கிறிஸ்து பார்ப்பது போல பார்த்து அன்பு கூற வேண்டும்.

**இரத்தாம்பரம்** இராஜரீகத்தையும், அதிகாரத்தையும் காண்பிக்கிறது. வானத்தின் கீழெங்கும் சகல அதிகாரமும் இயேசுவுக்கு உண்டு. அந்த அதிகாரத்தை கிறிஸ்து நமக்கு பகிர்ந்து அளித்திருக்கிறார். ஆசாரியன் பேச்சில் ஒரு அதிகாரம் இருக்கிறது. அவன் சொல்லுவது நடக்கும். அவன் சொல்வது நிலைக்கும்.

நாம் கட்டுவது கட்டப்படும். நாம் கட்டவிழ்ப்பது கட்





டவிழ்க்கப்படும். பிசாசுகளைத் துரத்தவும்.வியாதிஸ்தர்களை குணமாக்கவும் அருள்நாதர் அப்போஸ்தலர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அந்த அதிகாரத்திற்கு சுதந்தரவாளிகள் நாம்.

ஏபோத்தை தரித்துக்கொள்ளுதல் என்பது கிறிஸ்து நமக்களித்த இராஜரீக அதிகாரத்தை நான் பெற்றிருக்கிறேன் என்று அறிக்கை செய்வதாகும்.

பிரியமானவர்களே! நீங்கள் இராஜரீக ஆசாரியர்கள் என்றால், சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிப்பீர்கள். சத்துருவின் அதிகாரங்களை முறிப்பீர்கள்.

அடுத்து, **சிவப்பு நூல்**, இஃது கிறிஸ்துவின் பாடுகளின் ஐக்கியத்தை நமக்கு காண்பிக்கிறது. கிறிஸ்துவின் அன்பு, அதிகாரம் இவைகளில் எப்படிப் பங்கேற்கிறோமோ அந்த அளவிற்கு அவருடைய பாடுகளுக்கும் நாம் பங்காளிகளாயிருக்கிறோம் NO CROSS NO CROWN என்று ஒரு சொல் வழக்கு ஆங்கிலத்தில் உண்டு. அதன் பொருள் சிலுவை இல்லையேல் சீர்மகுடமும் இல்லை என்பதாகும்.

**கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக, அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள் (1, பேதுரு 4:13)**

**கிறிஸ்துவின் பாடுகளுக்கு சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப்பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறது என்னவென்றால். (1, பேதுரு 5:1)**

மேற்கூறிய வசனங்களிலிருந்து அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகளாகவும், சாட்சிகளாகவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்து பாடுகளினூடே பரமனைத்துதித்து பாரினில் சாட்சியாய் ஜொலித்திடுவோமாக.

**திரித்த மெல்லிய பஞ்சு நூல் பூரண பரிசுத்தத்திற்கு அடையாள மாயிருக்கிறது. பொன் விசுவாசத்தின் பூரணத்திற்கும் இளநீல நூல்அன்பின் பூரணத்திற்கும் இரத்தாம்பரம் வல்லமையின் பூரணத்திற்கும் சிவப்புநூல்பாடுகளின் பூரணத்திற்கும், மெல்லிய பஞ்சு நூல் பரிசுத்ததின் பூரணத்திற்கும் அடையாளங் களாயிருக்கின்றன.**

இவ்வகையான சீரைப் பெற்ற ஏபோத்தை ஆசாரியன் தனக்கு முன்னும் பின்னுமாக இருக்கும்படி தோள்களின் மேல் தொங்கும்படி அணிந்து கொள்ள வேண்டும்.

இரண்டு கோமேதக கற்களில் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரப் பெயர்களை செதுக்கி அதை தோள்களின் மேல் தொங்குகிற ஏபோத்தில் இணைத்து கொள்ளவேண்டும்.

இஃது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ள சமுதாய பொறுப்பை காண்பிக்கிறது. இந்த தேசத்திற்கு நம்மைக் காவலாளிகளாக தேவன் வைத்துள்ளார் தேசத்தின் ஜனங்களை சுமப்பதற்கும், காப்பதற்கும் நமக்கு கடமை அருளப்பட்டிருக்கிறது. இயேசு நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தார். நாம் நன்மை செய்வதில் சோர்ந்து போகாமலிருப்போமாக.





## 5. மார்ப்பதக்கம்

ஏபோத்துக்கு மேல் ஆசாரியன் நெஞ்சில் தொங்கும் படியாகச் செய்யப்பட்ட விசித்திரமானதும் விலையேறப் பெற்றதுமான ஒன்று இஃது.

முன்னே சொல்லப்பட்ட நூல்களால் ஒரு ஜான் நீலமும், ஒரு ஜான் அகலமுமாக நெய்யப்பட்ட பட்டையில் ஒரு வரிசைக்கு மூன்று வீதம் நான்கு வரிசையாக பன்னிரண்டு இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தது. அந்தப் பன்னிரண்டு இரத்தினக்கற்களின் மீதிலும் இஸ்ரவேலர் கோத்திரங்களின் பன்னிரண்டு பெயர்களும் பொறிக்கப்பட்டிருக்கும்.

**கற்கள்**

| | | |
|---|---|---|
| பத்மராகம் | புஷ்பராகம் | மாணிக்கம் |
| மரகதம் | இந்திரநீலம் | வச்சிரம் |
| கெம்பு | வைடூரியம் | சுகந்தி |
| படிகப்பச்சை | கோமேதகம் | யஸ்பி |

**கோத்திரங்கள்**

| | | |
|---|---|---|
| யூதா | இசக்கார் | செபுலோன் |
| ரூபன் | சிமியோன் | காத் |
| எப்பிராயீம் | மனாசே | பென்யமீன் |
| தாண் | ஆசேர் | நப்தலி |

இந்த அட்டவணையைப் பார்த்தவுடன் மார்ப்பதக்கம் எப்படியிருக்கும் என்று ஓரளவு யூகித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

ஆசாரியன் தேவ சமூகத்திற்கு போகும் போதெல்லாம் இந்த மார்ப்பதக்கத்தினை அணிந்து கொண்டு செல்லுகிறான். அதாவது ஆத்துமாக்களை நெஞ்சின்மீது சுமந்து செல்லுகிறான்.

நம்முடைய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து தமது நெஞ்சில் நம்மை வைத்துக் கொண்டு இன்றளவிலும் பிதாவின் முன்பாக நின்று பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

அதைப்போலவே, நாமும் ஆத்தும பாரம் உள்ளவர்களாய் தேவ சமூகத்தில் பரிந்து பேசுகின்றவர்களாய். நிற்க வேண்டும்.

கோமேதகக் கற்களில் செதுக்கப்பட்ட பன்னிரெண்டு பெயர்கள் ஒரு விசுவாசிக்கு இருக்க வேண்டிய சமுதாய பொறுப்பை உணர்த்துவது போல இந்தப் பன்னிரெண்டு கற்களால் அமைக்கப்பட்டிருக்கிற மார்ப்பதக்கம் ஒவ்வொரு விசுவாசிக்கும் இருக்கிற ஆவிக்குரிய பொறுப்பைக் காண்பிக்கிறது.

நாம் தேசத்தைக் காக்கிற காவல்காரர்கள் மாத்திரம் அல்ல தேசத்தை எச்சரிக்கிற ஜாமக்காரர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். சபையையும் சமுதாயத்தையும் நெஞ்சிலே சுமந்து கொண்டு தேவ சமூகத்தில் நிற்கிறவர்களாக இருக்கும்படிக்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆ! என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீருமானால் நலமாயிருக்கும் என்று புலம்புகிற எரேமியா போன்றவர்களே இராஜரீக ஆசாரியர்கள்.





என் பிள்ளைகளே, என் ஜெபங்களில் உங்களுக்காக கர்ப்ப வேதனைப்படுகிறேன் என்று கதறுகிற பவுலைப் போன்றவர்களே இராஜரீக ஆசாரியர்கள்.

தேவனுக்குச் சித்தமான எல்லாவற்றிலேயும் தேறினவர்களாயும், பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலை நிற்க வேண்டும் என்று தன் ஜெபங்களில் எப்பாபிராவைப் போல் போராடுபவர்களே இராஜரீக ஆசாரியர்கள்.

மார்ப்பதக்கம் ஆசாரியன் அலங்காரத்தைக் கூட்டுவதல்ல. ஆசாரியன் ஆத்துமபாரத்தைக் காட்டுவதாயிருக்கிறது.

## 6. ஊரீம், தும்மீம்

ஏபோத்துக்கு மேலே அணியப்பட்ட நியாயவிதி மார்ப்பதக்கத்தின் முன்பகுதியில் பனிரெண்டு கற்களினால் இஸ்ரவேல் கோத்திரங்களின் பெயர்கள் பதிக்கப்பட்டிருக்கிறது போல, அதன் பின்பகுதியில்ஒரு பை போன்ற அமைப்பு இருக்கும். அதனுள் ஊரீம், தும்மீம் என்ற இரண்டு விதமான கற்கள் வைக்கப்பட்டிருக்கும். (இவைகளைக் குறித்து இன்னும் சரியான விளக்கம் கிட்டவில்லை).

அவைகளுக்கு ஒளி என்றும் உண்மை என்றும் அர்த்தம். ஆம் என்பதற்கும் இல்லை என்பதற்கும் குறிப்பு அடையாளங்களாக இவைகள் பயன்படுத்தப் பட்டது. ஒரு காரியத்தில் தேவ நடத்துதல் உள்ளதா? அனுமதி உண்டா? என்பதை கண்டறிய ஆசாரியன் தேவ சமூகத்தில் நின்று இவைகளில் ஒன்றை எடுத்து காரியத்தை உறுதி செய்வர்.

முழு இஸ்ரவேல் ஜனத்தையும் தேவ சித்தத்துக்குள் நிற்க வைத்தவர்களும் வழி நடத்தினவர்களும் ஆசாரியர்களே.

இராஜரீக ஆசாரியர்களாகிய நாம் ஊரீம், தும்மீம் என்பவைகளோடு (தேவ சித்தத்தை அறிந்தவர்களாய்) தேவ

ஜனத்திற்கு கர்த்தரின் வழியைத் தெரியப்படுத்த வேண்டும்.

கர்த்தருக்குப் பயந்தவர்களிடத்தில் அவருடைய இரகசியம் இருக்கிறது. தேவ இரகசியத்தை அறிந்து தெளிவுள்ள சித்தத்தை சபைக்கும், குடும்பத்திற்கும் வெளிப்படுத்த வேண்டியது நம்மேல் விழுந்திருக்கிற கடமை.

குருடனுக்கு குருடன் வழிகாட்டமுடியுமா? கூடாதே, இருளில் வாழும் மாந்தர் இடறில்லா வழிநடக்க இரகசியங்களை வெளிப்படுத்தும் நபராக நாம் மாறும் முகத்தான் நாள்தோறும் தேவ சமூகத்தில் காத்திருந்து, தேவ திட்டத்தை அறிந்து கொள்ளவேண்டும்.

இந்த உலகத்தில் தேவன் எதைச் செய்தாலும் அதை தம்முடைய பரிசுத்தவான்களுக்கு தெரியப்படுத்தாமல் செய்வதில்லை என்பதற்கு சோதோம், கொமோரோ நிகழ்ச்சி ஒரு முன் மாதிரியாக இருக்கிறது. சோதோமை அழிப்பதற்கு முன்பாக ஆபிரகாமினிடத்தில் தெளிவாய் தேவன் விவரித்திருக்கிறார்.

அப்படி தேவன் தமது திட்டதை ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தியதற்கு காரணம் என்ன என்பதை ஆதியாகமம் 18–ம் அதிகாரத்தை வாசித்துப்பார்த்தால் உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான் – (வ.22). தேவ சமூகத்தில் நிற்கிற மனிதன் தேவதிட்டதை அறிந்து கொள்ளுகிறான் என்பது மாத்திரமல்ல. சில வேளைகளில் தேவனுடைய தீர்ப்பையும் திசை திருப்புகிறான் என்பது உண்மை.

இந்த கடைசிகால பரிசுத்தவான்களாகிய நாம் தேவ சித்தத்தை அறிகிற அறிவு உள்ளவர்களாய் இருந்து நம்மையும், சபையையும் வழிநடத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

## 7. தலைப்பாகை

ஆசாரியனுடைய வஸ்திரத்தில் அலங்காரமுள்ளதும்,





அங்கீகாரத்தை வழங்குவதும் இந்த தலைப்பாகை ஆகும். யாத். 29:6–ல் தலைப்பாகையை வைத்து பரிசுத்த கிரீடத்தை பாகையின்மேல் தரித்து, என்று எழுதப் பட்டுள்ளபடியால், ஆசாரியனுடைய தலைப்பாகை பரிசுத்த கிரீடமாக இருக்கிறது.

இராஜாவுக்கு சூட்டப்படுகிற கிரீடம் அவனது பதவியின் அதிகாரத்தைக் காண்பிக்கிறது. ஆனால், இராஜரீக ஆசாரியரின் கிரீடம் அதிகாரத்தை மாத்திரமல்ல, அலங்காரத்தையும் அங்கீகாரத்தையும் சேர்த்தே காண்பிக்கிறது.

சுருங்கச் சொல்லின், சிந்தையில் பரிசுத்தம் அல்லது கிறிஸ்து இயேசுவின் சிந்தை ஒவ்வொருவரிடத்திலும் காணப்படவேண்டும் என்று இது குறிப்பாய் உணர்த்துகிறது.

எபேசியர் 6:17 – லும், 1.தெச 5 : 8 – லும் இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீரா என்று குறிக்கப்பட்டிருக்கிறபடியால் கிறிஸ்துவின் நாளில் நமக்கு வரப்போகிற சரீரமீட்பாகிய இரட்சிப்புக்கான ஆயத்தைத்தை இஃது காட்டுகிறது.

தலைப்பாகையை இழந்தவன், தலை இல்லாதவனுக்குச் சமம். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய பரிசுத்த பணியை செய்ய முடியாது. பரிசுத்த இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கவும் முடியாது.

## 8. பொற்பட்டம்

அந்தக் கிரீடத்தின் முன்பகுதியில் பொன்னினால் செய்யப்பட்ட பட்டையின் மேல் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று முத்திரை வெட்டாய் வெட்டப்பட்டது.

இஃது நம்மிடத்தில் காணப்படவேண்டிய பரிபூரண பரிசுத்தத்தைக்காண்பிக்கிறது.

பவுல் எழுதுகிறபோது உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றும் குற்றமற்றதாய் காக்கப்படுவதாக என்று 1, தெச. 5 :23 –ல் எழுதியிருக்கிறார். நம்முடைய அழைப்பும்

தெரிந்து கொள்ளுதலும் எப்பேர்ப்பட்டது. என்பதை நாம் புரிந்துகொள்ளத்தக்கதான அறிவு நமக்கு வேண்டும்.

நாம் பரிசுத்தத்திற்காகவே அழைக்கப் பட்டிருக்கிறோம். இந்தப் பரிசுத்தத்திற்கு அளவுகோல் என்ன தெரியுமா? பாஸ்டர் அல்ல, பலமாய் பயன்படுத்தப்படுகிற பக்தர்கள் அல்ல, தேவனே நமது பரிசுத்தத்தின் அளவு கோல்.

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறபடியே **நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்** (1 பேதுரு 1 : 15) என்று பேதுரு சொன்னதை நினைப்பூட்டும் படியாக விரும்புகிறேன்.

தேவன் விரும்புகிற பரிசுத்தம் நம்மில் காணப்படவில்லையென்றால், அவர் வருகையின் நாளில் மறுரூபமாகுதல் என்பது சாத்தியப்படாத ஒன்றாய் இருக்கும்.

ஆகவே, எனக்கன்பானவர்களே! இராஜரீக ஆசாரியர்களாகிய நீங்கள் உள்ளங்கிக்கு அடையாளமாக உள்ளான பரிசுத்தத்தையும், இடைக்கச்சைக்கு அடையாளமாக வசனத்தின்படி வாழ்வையும், மேலங்கிக்கு அடையாளமாக ஆவியில் நிறைந்த கனிதரும் ஜீவியத்தையும், ஏபோத்துக்கு அடையாளமாக ஆத்தும பாரத்தையும், ஊரீம், தும்மீம் இவைகளுக்கு அடையாளமாக தெய்வீக வெளிப்பாட்டையும், தலைப்பாகைக்கு அடையாளமாக வருகையின் நம்பிக்கையையும், பொற்பட்டத்திற்கு அடையாளமாக பூரண பரிசுத்தத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள். தரித்துக் கொள்ளுங்கள்.

அப்பொழுது நீங்கள் தைரியமுள்ள ஆசாரியன், தகுதியுள்ள ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறதுபோல் அவர் வரும் நாளில் வெற்றியோடு பரம எருசலேமுக்குள் பிரவேசிப்பீர்கள்.



# 3

# ஆசாரியனின் உதடுகள்

நீங்கள் வாசிக்கும் இந்தப் அதிகாரத்தின் தலைப்பாகிய ஆசாரியனின் உதடுகள் என்ற வார்த்தை வேதாகமத்தில் மல்கியா 2 ஆம் அதிகாரம் 7–ஆம் வசனத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த மல்கியா 2–அம் அதிகாரம் முழுவதும் ஆசாரியர்களுக்கென்றே எழுதப்பட்டது.

இந்த முழு அதிகாரத்தில் ஆசாரியருக்குக் கட்டளை, ஆசாரியர் மேல் தீர்ப்பு, ஆசாரியரின் மீறுதல், ஆசாரியரோடு உடன்படிக்கை ஆகிய பல்வேறு சிறப்பு அம்சங்கள் அடங்கியுள்ளது.

இங்கு ஒரு முக்கிய காரியத்தை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆசாரியர் என்ற வார்த்தை சிறப்பு நோக்கில், அழைக்கப்பட்ட முழு நேர ஊழியர்களையும் பொது நோக்கில் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியையும் குறிக்கும். எனவே இந்தத் தலைப்பில் விசுவாசிகளுக்கும் ஊழியர்களுக்கும் சேர்த்தே செய்தியினை வழங்கவிருக்கிறேன். நீங்கள் எந்நிலைக்குரியவரோ அந்நிலைக்குரிய கருத்துக்களையும் சத்தியங்களையும் ருசித்து புசித்து ஜீரணித்து பலனடையுங்கள்.

ஆசாரியனுடைய உதடுகள் என்று ஆவியானவர் எழுதி

வைத்திருக்கிறார். ஆசாரியனுடைய கண்களையோ கரங்களையோ முக்கியப் படுத்தாமல் உதடுகள் என்று முக்கியப்படுத்தப்பட்டிருப்பதை கவனித்துப் பாருங்கள். உதடுகள் என்பதை நேரடியாகவோ அல்லது குறிச்சொல்லாகவோ வைத்து எந்த விதத்தில் தியானம் பண்ணினாலும் அஃது மிக முக்கியமானதே.

சரீரப் பிரகாரமாக ஒரு மனிதனின் புறம்பான தோற்றத்தில் முக்கிய மாறுபாட்டை உண்டாக்குவது அவன் உதடுகளே. ஒருவருடைய உதட்டைப் பார்த்து இவர் நைஜீரியாவைச்சார்ந்தவர், இவர் இந்நாட்டைச் சார்ந்தவர், அந்நாட்டை சார்ந்தவர்கள் என்று மிக சுலபமாக குறிப்பிட்டுச் சொல்ல முடியும். ஆக உதடுகள் என்பது ஒருவனை இன்னான் என்று காட்டிக் கொடுத்துவிடும்.

உதடுகள் என்ற குறிப்புச் சொல்லுக்கு நாவு, வாய், உதடு, வார்த்தை என்று பல பொருட்களைக் கொள்ளமுடியும். இந்த அளவுகோளின்படி ஒருவனுடைய வார்த்தையும் பேச்சும் அவன் ஆவிக்குரிய ஜீவியத்தில் இன்ன நிலையைச் சார்ந்தவன் என்று தெளிவாகக் காண்பித்துவிடும்.

மற்ற அவயவங்களை விட உதடுகளுக்கு (வாய்க்கு) சிறப்பான அம்சம் இருக்கிறது. கண்ணானது சரீரத்திற்கு விளக்காய் இருப்பது போல் வாயானது சரீரத்திற்கு வாசலாய் இருக்கிறது. அதனால் தான் வெளியே இருந்து வாய்க்குள்ளே போகிறதல்ல உள்ளேயிருந்து வாய்க்கு வெளியே போகிறதே மனிதனை தீட்டுப்படுத்தும் என்று இயேசு கிறிஸ்து சொன்னார். எனவே ஆசாரியர்கள் தங்கள் உதடுகளைக் குறித்து (வார்த்தைக்களைக் குறித்து) அக்கறை உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

தீர்க்கதரிசியாக ஏசாயா சிறப்பான தீர்க்கதரிசன





ஊழியத்தை செய்து கொண்டிருக்கும் வேளையில் தேவதரிசனத்தைப் பார்த்தார். அக்கணமே ஐயோ, அசுத்த உதடுள்ளவன் நான் என்று பதறி புலம்பி, கலங்கி கண்ணீர் வடித்தார். (ஏசாயா 6:5) உன்னதமான தேவனுடைய தூதுவனாகிய ஏசாயாதீர்க்தரிசன ஊழியத்தை ஒருபுறம் செய்தாலும் மறுபுறம் அசுத்த உதடுகளுள்ளவனாகவே இருந்தான். இந்த நிலை இன்றைய கிறிஸ்தவத்தை இறுகப்பற்றிக் கொண்டிருக்கிறது.

தேவனுடைய வார்த்தைகள் ஒருபுறம், உலகப்பிரகாரமான பேச்சுகள் மறுபுறம், பாகை அணிந்து வாகை சூடி உள்ள எனக்கன்பானவர்களே! உங்கள் உதடுகள் எப்படிப்பட்டது? உளநிலைக்கும் உதடுகளுக்கும் உறவு இருக்கிறதா? இல்லையெனில் அசுத்த உதடுள்ளவன் என்று அழுகையோடு புலம்புங்கள். ஏசாயாவின் சத்தத்தைக் கேட்டு எரிகொள்ளியை எடுத்து வந்து உதடுகளைத் தொட்டு தூய்மையாக்கின தூதன், உங்களைத் தூய்மை ஆக்குவார்.

உங்கள் உதடுகள் உரியவிதத்தில் இல்லாவிட்டால் பெரிய இழப்பை நீங்கள் சந்திப்பீர்கள். உன் மாம்சத்ததைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே. அது புத்திப் பிசகினால் செய்ததென்று தூதனுக்கு முன் சொல்லாதே என்று பிரசங்கி (பிரசங்கி 5: 6) சொல்வதைக் கவனித்துப் பாருங்கள்.

நீதி மொழிகள் 12:22 – இல் பொய் உதடுகளைக் குறித்து குறிப்பிட்டுள்ளது. நம்முடைய உதடுகள் சத்தியத்தைப் பேசுகிற (நீதி 12:19) உதடுகளாக இருத்தல் அவசியம். உன்னதப் பாட்டில் மணவாளியே உன் உதட்டின் கீழ் தேன் இருக்கிறது என்ற வார்த்தையின்படி மென்மையான, மேன்மையான வசனிப்புகள் நமது உதட்டிலிருந்து வெளிப்பட வேண்டும்.

# 4

# ஆசாரியன் அறிவைக் காக்க வேண்டும்

ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும் என்று மல்கியா 2:7 –இல் எழுதப்பட்டுள்ளது. இராஜாவினுடைய பிள்ளை இளவரசனாகப் பிறப்பது போல் கிறிஸ்துவுக்குள் பிறக்கிறவர்கள் மறுபிறப்பின் நாளிலேயே மகிமையான அனுபவங்களுக்கு சொந்தக்காரராய் பிறக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூவுலகில் ஊழியம் செய்த நாட்களில், அவரை வார்த்தையினால் சிக்க வைக்க வாய்ப்புத் தேடுவதையே வழக்கமாகக் கொண்டவர்களை வசீகரமான வார்த்தையினால் வாயடைக்கச் செய்து. வந்த வழியே திரும்ப வைத்தார்.

அவருடைய அப்போஸ்தலர்கள் கல்லாதவர் களாயிருந்தாலும் பொல்லாத குணம் படைத்தவர்கள் எதிர் நில்லாதபடி சொல்லால் அடித்து சோர்ந்து போக வைத்தார்கள். பேதுருவின் பிரசங்கம் பலருக்கு பிரமிப்பை உண்டாக்கியது காரண மென்ன? அவர்களுக்குள்ளே விசேஷித்த ஆவி இருந்தது. அது என்ன ஆவி தெரியுமா? சகலத்தையும் ஆராய்ந்து அறிந்திருக்கிற சர்வ வல்லவரின் ஞானத்தின் ஆவி.





ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனா யிருந்தால்யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரிடத்தில் கேட்டால் கடிந்து கொள்ளாமல் கொடுக்கிறார் என்று யாக்கோவு 1 :5 இல் எழுதப்பட்டுள்ளது. அவர் பேதைகளை ஞானியாக்குகிறார் என்று மற்றொரு வசனம் சொல்லுகிறது.

**ஆகவே ஆசாரியர்களே! உங்கள் ஆசாரியத் தலைப்பாகைக்குள்ளே மனித சதைத் தலையல்ல மகிமைத் தேவனின் ஞானப் பெட்டகம் மறைத்து வைக்கப்பட் டுள்ளது.**

**ஆசாரியன் அளந்துபேசக் கற்றுக்கொள்ள வேண்டும்.** எந்த வார்த்தையிலும் எங்கும் பிடிகொடுக்காமல் எந்த குற்றச்சாட்டு அம்புகளுக்கும் இலக்காய் நிற்காமல் செம்மையான வார்த்தைகளை செப்பிடுதல் வேண்டும்.

இயேசுவைக் குற்றப்படுத்த இராயனுக்கு வரி கொடுக்கலாமா? என்று நியாயமான தோரணையில் சிலர் கேள்வி கேட்டபோது உபாயத்தை உடனடியாகப் புரிந்து கொண்ட இயேசு நேயமாய் அவர்களிடத்தில் காசை வாங்கி கேள்விதனைக் கேட்டு இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று அழகான பதிலை அந்த அபாயகரமான வேளையில் அள்ளிவீசி அவர்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கினார்.

நமது பிரதான ஆசாரியனாகிய, இயேசு சென்ற பாதையில், உடன் ஆசாரியர்களாகிய நாம் பீடு நடைபோட வேண்டும். அவரை விசுவாசிக்கிறவன் அவரைக் காட் டிலும் பெரிய காரியங்களை செய்வது எவ்வளவு நிச்சயமோ அப்படியே அவரைக் காட்டிலும் அரிய காரிங்களைப் பேசுவதும் நிச்சயம்.

உபாகமப் புஸ்தகம் 17–ஆம் அதிகாரம் 9–ஆம் வசனம் முதல் 11–ஆம் வசனங்கள் வரை எடுத்து வாசித்துப்

பாருங்கள். முழு இஸ்ரவேலுக்கும் நியாயம் விசாரிக்கிறப் பொறுப்பை ஆசாரியர்களுக்கு தேவன் கொடுத்திருந்தார். அவர்கள் சொல்லும் தீர்ப்புக்கு இணங்கி நடக்க வேண்டு மென்று இஸ்ரவேலுக்கு பிரமாணமும் கொடுத்திருந்தார்.

எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியனுக்கே அத்தனை ஞானம் இருக்குமானால் அற்புத தேவனின் ஆவியைப் பெற்ற நமக்கு எத்தனை ஞானம் இருக்குமென்று யோசித்துப் பாருங்கள்.

ஆனால் இன்றைய நிலை என்ன? என் ஜனங்கள் அறிவில்லாமல் கெட்டுப் போகிறார்கள் என்று ஆண்டவர் சொன்ன வார்த்தை அப்படியே நிறைவேறுகிறது. ஆசாரியர்கள் பேச்சில் அழகு இருக்கிறது. ஆனால் அறிவுதான் இல்லை. ஆசாரியர்கள் பெரும்பகுதி தீட்டுப்பட்டு தீய்ந்து போனதற்குக் காரணமே இந்தத் தீதான பேச்சுக்களே. உலகத்தார்கூட எத்தனை விவேகமாகப் பேசுகிறார்கள் தெரியுமா?

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியிலிருந்த வேளையில் எதிர்க்கட்சியினர் சட்ட மன்றத்தில் ஒரு நாள், "உங்கள் நாட்கள் எண்ணப்படுகிறது". என்று ஏளனமாக சொன்னதற்கு "என் அடிகள் அளந்து வைக்கப்படுகிறது". என்று அண்ணா நயமாக சொன்னபோது மாற்றாரும் மனம் மாறிவிட்டனர்.

பேச்சில் வேகம் இருக்கக் கூடாது. மாறாக விவேகம் இருந்திடல் வேண்டும். நம்மைக் கவிழ்க்க சாத்தான் எந்த வடிவத்தில் வருவான் என்று தெரியாது. அன்று ஏதேனில் அவனுக்கு, தந்திரமுள்ள சர்ப்பம் கிடைத்தது போலவே இன்றும் பல வாடகைக் கூடுகள் அவனுக்குத் தாராளமாக கிடைக்கிறது. ஆகவே யாரிடத்தில் என்ன பேசுகிறோம் என்பதைத் தெளிவாக உணர்ந்து பேசுதல் வேண்டும்.





ஒரு ஆவிக்குரிய சபையில் ஆராதனை வேளையில் விசுவாசி ஒருவர் எழும்பி நின்று போதகரை நோக்கி கேள்விக்கனைகள் அடுக்கடுக்காய் தொடுத்தாராம் போதகர் அடக்கிப் பார்த்தார். பிரச்சினை முடியவில்லை. போதகர் சொன்னார். "யோவ் பேசாமல் உட்காரும் நான் முன்னே சாதாரண ரவுடி, இப்ப பெந்தகோஸ்தே ரவுடி இதற்கு மேல் நின்ன நடப்பதே வேறு " அவ்வளவுதான் பிரச்சினை ஒய்ந்து விட்டது. இங்கு கவனித்துப் பாருங்கள். பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாலும் அந்தப் போதகரின் ஆசாரியப் பாகை அசுசிப்பட்டு விட்டது என்பது உண்மை.

உண்மை பேசுதல் வேண்டும், அதுவும் நன்மையாய்ப்பேசுதல் வேண்டும்.

மென்மையாய்ப் பேசுதல் வேண்டும், அதுவும் மேன்மையானதை பேசுதல் வேண்டும்.

அடக்கமாய் பேசுதல் வேண்டும், அதுவும் அமைதலாய்ப் பேசுதல் வேண்டும்.

அன்பாய்ப் பேசுதல் வேண்டும், அதுவும் அறிவோடு பேசுதல் வேண்டும்.

இவைகள் எல்லாவற்றையும் விட **கூடுமான வரை பேசாமலிருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.**

மணவாட்டியின் உதட்டின் கீழ் தேனும் பாலும் இருக்கிறதென்று சாலமோன் ராஜா உன்னதப்பாட்டில் புகழுமாப் போல், அழைக்கப்பட்ட ஆசாரியர்கள் மற்றவர்களைப் புஷ்டியாக்க பால் போன்ற பண்பான வார்த்தைகளை (ஞான) கண்களைத் தெளிவிக்கும் தேன் போன்ற தெளிவான வார்த்தைகளை மொழிந்திடல் வேண்டும்.

சமீபத்தில் எனக்கொரு சாட்டையடி கிடைத்தது. நாங்கள்

குடும்பமாய் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தோம். இடையில் ஏறின ஒரு கூட்டம், பிள்ளைகளை மடியில் வைத்துக் கொண்டு எங்களுக்கு உட்கார இடம் கொடுங்கள் என்றார்கள். பிள்ளைகள் உட்கார வேண்டும் என்பதற்காகத்தான் இந்த பஸ்ஸில் ஏறி அவர்களுக்கும் டிக்கட் வாங்கி அமர்த்தியுள்ளோம் என்று சொல்லி முடிப்பதற்குள் நின்று கொண்டிருந்தவர் "ஜீசஸ் இதுதான்சொல்லிக் கொடுத்தாரா? " என்று கேட்டார். அதைக் கேட்ட எனக்கு மாபெரும் அதிர்சி உடலெங்கும் பாய்ந்தது.

அவர்சொன்னது கொள்கையளவில் தவறாக இருந்தாலும் அவருக்குத்தான் என்னிடத்தில் எவ்வளவு எதிர்ப்பார்ப்பு. ஜீசஸ் சீடர்கள் அவரைப் போலிருக்க வேண்டுமென்பது அவரின் நோக்கு, முன்பின் தெரியாத அவர் என்னைக் கிறிஸ்தவனென்று எப்படிக் கண்டுபிடித்தார்? நான் உடுத்தியிருந்த வெண் வஸ்திரம் என்னைக் கிறிஸ்தவனென்று காட்டி கொடுத்துவிட்டது. வஸ்திரத்தினால் கிறிஸ்தவனென்று காண்பித்துக் கொள்ளுகிற நான் எனது கொள்கையினால் கிறிஸ்துவை வெளிப்படுத்தாமல் போய்விட்டது மிகுந்த வேதனைக்குரியதே.

ஆசாரியவஸ்திரம்தரித்துக் கொள்வது முக்கியமல்ல, ஆசாரியத்தன்மையை பெற்றிருப்பது முக்கியம். **உடையில் கிறிஸ்தவர்களாகக் காட்டிக் கொள்ள விரும்பும் அளவிற்கு நடையில் வெளிப்படுத்த கிறிஸ்தவம் தவறி விட்டதே இன்றைய பரிதாபநிலை.**

கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களுக்கு சீஷர் என்ற பெயரே முதலில் இருந்தது. அவர்களின் நடைமுறை செயல்பாடுகள் அந்தியோகியாவை அசைத்ததினால்





சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்று அங்கு அழைக்கப்பட்டார்கள். இன்று பெயரிலும் வேடத்திலும்கிறிஸ்தவம் மிளிருகிறதே தவிர வாழ்விலும் வழக்கிலும் தளர்வதும் தவறுவதும் வருத்தமான காரியம்.

ஆசாரியனாகிய எஸ்றா நமக்கு நல்லதோர் முன்மாதிரி. வேதத்தை ஆராயவும் அதன்படி நடக்கவும். தன் இருதயத்தை பக்குவப்படுத்திக் கொண்டான் என்று எஸ்றா 7:10 – இல் வாசிக்கிறோம். வேதத்தை வாசிப்பதையல்ல. அதன்படி நடக்க நமது இருதயத்தை பக்குவப்படுத்தி கொள்ள வேண்டும். பக்குவப்பட்டவன் வாயிலிருந்து பரீட் சிக்கப்பட்ட வார்த்தைகளே வெளிவரும்.

**வார்த்தைகளால் வருத்தப்படுத்தாதீர்கள்.**

ஆசாரியர்களுக்கென பிரத்தியேகமாக எழுதப்பட்ட மல்கியா 2–ஆம் அதிகாரத்தின் 17–ஆவது வசனத்தை கவனித்துப் பாருங்கள். உங்கள் வார்த்தைகளினால் என்னை வருத்தப்படுத்துகிறீர்கள் என்று ஆண்டவரே ஆவேசம் பொங்கக் கூறுகிறார்.

இவர்கள் என்ன வார்த்தை பேசினார்கள் தெரியுமா? பொல்லாப்பு செய்கிற எவனும் நல்லவனென்றும் அப்படிப்பட் டவர்கள் மேல் அவர் பிரியமாயிருக்கிறார் என்றும்நியாயந் தீர்க்கிற தேவன் எங்கே என்றும் அவர்கள் சொல்கிறார்கள். (மல்கியா 2 : 17)

இந்த ஆசாரியர்களின் அறிவீனமான பேச்சைப் பார்த்தீர்களா! பொல்லாதவர்களை நல்லவர்களென்று விளித்து அவர்களை ஆண்டவருக்கு நண்பர்களாக்கி நியாயாதிபதியாகிய தேவனையே நிலையிறங்கச் செய்த இவர்கள் ஆசாரியர்கள்அல்லர். ஆண்டவரின் பெயரைச் சொல்லி அநித்தியமான ஆதாயம் தேடும் அற்பர்கள்.

அன்றொரு நாள் இஸ்ரவேலரின் பாளயத்தில் விபச்சாரம்

செய்தவர்களை பட்டயத்தினால் உருவக் குத்திவாதையை நிறுத்தினார்கள், வைராக்கியங்கொண்ட அன்றைய ஆசாரியர்கள். ஆனால் இன்றோ இவன் செய்வது தவறு என்று தெரிந்தும் அவன் அள்ளித் தரும்கொடை ஒன்றே போதுமென்றெண்ணி மனதுருகுகிற கர்த்தரை மாத்திரையாகத் தந்துவிட்டு மடியில் வாரிக்கொள்கிறது, அநித்திய பொருட்கள் மேல் ஆசையுள்ள கூட்டம்.

பிரியமானவர்களே! நீங்கள் சரியான நிலையில் நிற்க வேண்டியது மிகவும் அவசியம் நீங்கள் யார்? உங்களை ஆவிக்குள் வழிநடத்துகிற முன்மாதிரிகள் யார்? என்பதை சரியாக ஆராய்ந்து அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

நீங்கள் செய்யும் தவறை உங்கள் ஊழியக்காரர் அறிந்திருந்தும் உங்களை அவர் கண்டிக்கவில்லையென்றால் அதன் பின்னணி என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். அவர் உங்களை நேசிக்கவில்லை. உங்கள் பணத்தைத்தான் நேசிக்கிறார். அவரின் ஐக்கியத்தை விட்டு நீங்கள் உடனே விலக வேண்டும்.

உங்களின் சிறிய தவறையும் பொறுத்துக்கொள்ள முடியாமல் உங்கள் ஊழியர் உங்களைக் கடிந்து கொள்வாராகில் நீங்கள் பாக்கியவான்கள். உங்கள் ஊழியக்காரர் உண்மையிலேயே சிறந்த ஆசாரியன். அவர் உங்கள் பணத்தை அல்ல, உங்களையே அதிகமாக நேசிக்கிறார். ஒரு வேளை உங்கள் போதகரின் மேல் கோபித்துக் கொண்டு சபைக்குப் போகாமல் நின்றிருப்பீர்களாகில் இப்பொழுதே விரைந்து ஒடுங்கள். அவரிடம் சேருங்கள். அவர் உங்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுவார்.

**எந்த ஊழியக்காரன் வெளியரங்கமாய் கடிந்து உபதேசிக்கிறானோ அவனே அந்தரங்கத்தில்**





**தேவடனித்தில் ஜனங்களுக்காக பரிந்து பேசுகிறவனாயிருப்பான்.**

மோசே ஜனங்களை கடிந்து பேசினாலும் என் பேரை கிறுக்கிப் போடும் இவர்களைக் காப்பாற்றும் என்று தேவனிடத்தில் பரிந்து பேசியதை நினைத்துப் பாருங்கள், உங்களால் விடுபட முடியாத புகைத்தல், குடித்தல், விக்கிரகத்தை வணங்குதல் போன்ற காரியங்களை அறிந்திருக்கும் இவர்களைக் கண்டிக்காமல் கர்த்தர் உங்களை நேசிக்கிறாரென்று சொறிந்து கொடுத்து உங்களுக்கு இதமாக இருக்கும் வேளையில் பதமாக நன்கொடை புத்தங்களை கையில் கொடுத்து தங்கள் பையை நிரப்பிக் கொள்ளும், பக்கவழியாய் நுழைந்த சில ஆசாரியர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

உங்கள் இரட்சிப்பை முக்கியப்படுத்தாமல் உங்கள் ஆத்தும வளர்ச்சியைக் குறித்து அக்கரைப் படாமல், நீ எந்த நிலையிலிருந்தாலும் இயேசு நேசிக்கிறார் என்று சொல்லி பல ஆண்டுகாலமாக உன்னோடு உறவு வைத்துள்ள ஊழியர்களைக் குறித்து தேவ ஜனமே நீ எச்சரிக்கையாயிரு. ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசம் பண்ணுகிறார்கள். அதன் தீர்க்கத்தரிசிகள் பணத்துக்காக குறி சொல்கிறார்கள் என்ற மீகா 3:11 – ஆம் வசனத்தை உறுதிப்படுத்த ஒரு கூட்டமே கிளம்பி விட்டது கவனமாயிருங்கள்.

கூலிக்கு வேலைசெய்கிறவன் அல்லது ஆடு மேய்ப்பவன், இவர்களுக்கு கூலிதான் பெரிதே தவிர வேலையோ ஆடுகளோ முக்கியமல்ல அது புசித்தாலும் சரி புசியாவிட்டாலும் சரி அதைப்பற்றி அவர்களுக்கு அக்கரை இருக்காது. தங்கள் வயிறுகளையே தங்களுக்குத் தேவனாகக் கொண்டவர்களுடைய வலையில் விழாதபடிக்கு கவனமாயிருங்கள்.

என் அன்புக்குரிய வாசகரே, நீங்கள் ஊழியராக இருந்தால் உங்களுக்கு சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டுள்ளளேன். மல்கியா 2 :17 ஆம் வசனத்தை ஒரு சிறிய அட்டையில் எழுதி உங்கள் பாக்கெட்டுக்குள்ளே வைத்துக் கொள்ளுங்கள். பொல்லாப்பு செய்கிறவனை நல்லவனென்று சொல்லாதீர்கள்.

உங்கள் சபை ஆராதனைகளுக்கு கூட்டங்களுக்கு பல முக்கியஸ்தர்கள் வருவது நல்லது. அதற்காக சந்தோஷப்படுங்கள். ஆனாலும் குணப்படாத. அரசியல்வாதிகளை உங்கள் பிரசங்க மேடைகளில் உட்கார வைத்து அவர்களை அலங்கார பொம்மையாக்கி ஆட்களை சேர்க்க நினைக்காதீர்கள். அப்படிப்பட்டவர்களை அழைத்து நீங்கள் அமர்த்தும்போது உங்களுக்குப் பெருமை கிட்டலாம் ஆகிலும் அவரை அறிமுகம் செய்யும்போது (மல்கியா 2 : 17)– ன் படி) பொல்லாதவனை நல்லவன் என்று சொல்லக்கூடிய நிலைக்கு தள்ளப்படுவீர்கள்.

ஒரு ஊழியர் ஒரு அரசியல்வாதியை மேடையில் வைத்துக் கொண்டு இயேசு மக்கள்மேல் மனதுருகி வனாந்தரத்தில் ஆகாரம் கொடுத்தார். அதுபோல ஐயா அவர்களும் ஏழை மக்களுக்காக ஆகாரம் கொடுக்கும் திட்டம் கொண்டு வந்துள்ளார் என்று அவரைப் புகழ்ந்து 20–ஆம் நூற்றாண்டின் இயேசுவாக்கினார். மற்றொரு ஊழியர் பிறிதொரு அரசியல் தலைவரை இயேசு பார்வையற்றோருக்கு பார்வையளித்தார். ஐயா அவர்களோ கண்ணொளி வழங்கும் திட்டத்தின் மூலம் கண்ணாடி கொடுத்தார் என்று எக்காள முழக்கமிட்டார். ஐயகோ! இந்த ஊழியர்களால் அந்த அரசியல்வாதிகளுக்கு ஆசீர்வாதமல்ல ஆபத்துதான் கிட்டியது. ஒருவருக்கு ஆவி போய்விட்டது மற்றொருவருக்கு ஆட்சி போய்விட்டது.

ஊழியர்களாகிய ஆசாரியர்களே எந்த மனிதனையும்





வீணாகப் புகழாதீர்கள். பாவங்களை தைரியமாய் கண்டியுங்கள், உணர்த்துங்கள். அதற்கு தைரியமில்லா விட்டால் அவர்களுக்காய் அந்தரங்கதில் ஜெபியுங்கள். ஆனால் தயவு செய்து அஞ்ஞான மார்க்கத்தாரோடு ஊழியசம்மந்தமான உறவுகளை வைத்துக்கொள்ளாதீர்கள்.

நமது பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்து பூமியிலே ஊழியம் செய்கையில் தனது கூட்டத்திற்கு ஆட்சியாளராகிய ஏரோதுவையோ பிலாத்துவையோ தலைமை தாங்க அழைக்கவில்லை. பிரசித்தி பெற்ற மதக்குருக்களாக இருந்தும் தாம் பிரசங்கிக்கும் உபதேசத்தை ஏற்றுக் கொள்ளாத மதகுருக்களாகிய அன்னா மற்றும் காய்பாவை ஆசீர்வாத ஜெபத்திற்கு அழைக்கவில்லை. சிந்தித்துப்பாருங்கள். நமது இயேசுகிறிஸ்துவே செய்யாத ஒன்றை நாம் துணிகரமாய் செய்யக் கூடாது. இயேசு காட்டிய பாதையிலேயே செல்வோம்.

அநேக ஊழியர்களும் விசுவாசிகளும் கொஞ்சகாலம் பிரகாசித்து பின்னர் ஒளியிழந்து போவதற்குக் காரணம் அவர்களின் வாயின் வார்த்தைகளே, மல்கியா 2 : 7 – இல் அநேகரை வேதத்தைக் குறித்து இடறப்பண்ணினீர்கள் என்றும் மல்கியா 2 9 –இல் வேதத்தைக் குறித்து பட்சபாதம் பண்ணினபடியால் உங்களை அற்பரும் நீசருமாக்குவேன் என்றும் ஆவியானவர் குற்றஞ்சாட்டுகிறார்.

வேத வசனத்தின் மேல், பிடிப்பும், திட நம்பிக்கையும் இருத்தல் அவசியம். இடத்துக்கு ஏற்றாற்போல் வசனங்களை வளைப்பவர்களும் வசதிக்கேற்ப வசனங்களை வியாக்கியானம் செய்பவர்களும் வாழ்வில் சுபிட்சம் அடைவதில்லை. நீங்கள் கற்று நிச்சயித்துக் கொண்ட உபதேசத்தில் நிலைத்திருங்கள்.

ஆழமான சத்தியத்தில் ஆர்வமும் அனுபவமும் இல்லாத பிரசங்கிமார்கள் தீமோத்தேயு 6:4 ஆம் வசனத்தை ஒருதலைப் பட்சமாய் வியாக்கியானம் செய்து வருவதை பல இடங்களில் கேட்டிருக்கிறேன். உபதேசத்தைக் குறித்துப் பேசுகிறவர்கள் ஆத்துமாவில் நோய் கொண்டவர்கள் என்று விபரீத வியாக்கியானம் செய்கிறார்கள். உபதேசத்தைப் போதிக்கிறவர்கள் அல்ல, **வேற்றுமையான** உபதேசத்தைப் போதிக்கிறவர்களே நோய் கொண்டவர்கள் என்பதை I தீமோத்தேயு 6:3 – ஐ சேர்த்து வாசித்தால் தெரிந்து கொள்ளலாம்.

தேவனுடைய வார்த்தையைக் குறித்து எழுதும் பொழுது II தீமோ 4 : 3 ஆரோக்கியமான உபதேசம் என்றும், மீண்டும் அதே வார்த்தையை தீத்து 1 : 9 இலும், 2 : 2 இலும், 2 : 8 இலும் ஆரோக்கியமான உபதேசம் என்றும் அப்போஸ்தலனாகய பவுல் குறிப்பிடுகிறார். ஆகவே மனித ஞானத்திற்குட்பட்டு மனிதரை பிரியப்படுத்த மக்களை இடறப்பண்ணும் வேற்றுமையின் உபதேசத்தை அறிவிக்காதபடி கவனமாயிருத்தல் அவசியம்.

## அந்நிய அக்கினி போடாதீர்கள்

தேவனுடைய ஆசாரியர்களின் பேச்சும், மூச்சும், பிரசங்கமும், சாட்சியும் ஆவிக்குரியதாய் இருத்தல் அவசியம். அதிலும் பரத்திலிருந்து அனுப்பப்பட்ட ஞானத்தின் வெளிப்பாடாய் இருத்தல் வேண்டும். பரிசுத்தவான்கள் மத்தியிலும் பரிசுத்த பீடத்திலிருந்தும் பிரவாகித்து வருகிற பிரசங்கங்கள் தேவ பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறதாய் அமைய வேண்டும். மனுஷ வியாக்கியானங்களும் மனுஷ ஞானத்தினால். உண்டாகும் நயவசனிப்பும் சுயத்தை வெளிப்படுத்துகிறபடியால் அவைகள் அந்நிய அக்கினிக்கு ஒப்பானவைகள்.





லேவியராகமம் 10–ஆம் அதிகாரத்தில் முதல் ஏழு வசனங்களை வாசித்துப் பாருங்கள். அங்கே மிக பரிதாபமான ஆனால் பட்சபாதமற்ற ஒரு தீர்ப்பைக் காண்கிறோம். ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தங்கள் தூப கலசத்திற்கும் வெண்கல பலிபீடத்திற்கும் அனல் மூட்ட பரத்திலிருந்திறங்கிய அக்கினியைப் போட வேண்டும் என்பது பிரமாணம். பரத்திலிருந்து அக்கினி இறங்கியதாக லேவியராகமம் 9 : 24 உட்பட பல வசனங்களில் பார்கிறோம்.

ஆனால் ஆரோனின் புத்திரராகிய நாதாபும், அபியூவும் தங்கள் தூப கலசத்தில் அந்நிய அக்கினியைப் போட்டுக் கொண்டு வந்தார்கள். நடந்தது என்ன? கர்த்தருடைய அக்கினி அவர்களைப் பட்சித்தது அவர்கள் செத்தார்கள். ஊழியம்தான் அவர்கள் செய்தார்கள் ஆனால் அஃதினை மாம்சீகத்தில் (அந்நிய அக்கினி) செய்தபடியால் தேவ கோபம் இறங்கியது.

பிரியமானவர்களே இந்த முன் உதாரணமான எச்சரிக்கையை இருத்தி நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 12 : 21 இல் ஏரோது பிரசங்கம் பண்ணினான் என்றும் அதைக் கேட்ட மக்கள் இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள் என்றும் வாசிக்கிறோம். ஆனால் நடந்தது என்ன? கர்த்தர் அவனை அடித்தார். அவன் செத்தான்.

ஏரோது செய்தது பிரசங்கம் ஆனால் கிடைத்ததோ மரணம் அதன் அடிப்படைக் காரணம் அந்நிய அக்கினி. பிரசங்கிமார்களே உங்கள் உதடுகள் அறிவைக் காக்க வேண்டும். மூளை அறிவை வெளிப்படுத்துவீரானால் மூலையில் தள்ளப்படுவீர்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

நியாயாதிபதியாகிய சிம்சோனுக்குள்ளே ஆவி இருந்தது. அதோடு அசாத்தியமான வல்லமையும் இருந்தது.

அதனால் அகணி நார்க் கயிறுகளும் அக்கினியில்போட்ட சணல் நூலைப்போல் அற்று அறுந்து போயிற்று. இப்படி இருக்க இவனது இச்சையடக்கமில்லாமையின் நிமித்தம் கர்த்தர் அவனை விட்டு விலகினார். ஆனால் பெலிஸ்தியர் ஓர் நாள் வந்தபோது? (நியா 16 : 20) கர்த்தர் தன்னை விட்டு விலகினதை அறியாமல் எப்போதும் போல் உதறிக் கொண்டு போவேன் என்று எழுந்தான். என்னவாயிற்று என்று கவனியுங்கள். கண்ணொளி போனது, வெண்கல விலங்கு வந்தது. பராக்கிரமம் போனது மாவரைக்கும் வேலை தான் மிஞ்சியது.

இன்றைக்கும் அநேகர் ஆவியானவர் போனதை அறியாமல் மேடைகளிலும் ஜெபக் கூட்டங்களிலும் சிம்சோனைப் போல் உதறிக் கொண்டு இருக்கிறார்கள். உதறல் பெரியதாய் இருக்கிறதேதவிர உருப்படியான காரியங்கள் ஒன்றும் இவர்களைக் கொண்டு நடப்பதில்லை. இப்படிப் பட்டவர்கள் தரிசனம் கெட்டவர்கள், உள்ளத்தில் அந்நிய அக்கினியால் நிறைந்தவர்கள். அவர்களின் பங்கு சரீர உபாதையே.

ஆவி எடுபட்டுப் போன பிறகும் அந்நிய பாஷையை அச்சரம் பிறழாமல் அருமையாய் பேசும் சில ஆகாச சூரர்களை நான் பார்த்திருக்கிறேன். அறிவை உங்கள் உதடுகள் காக்க வேண்டும். மக்கள் மெச்ச வேண்டும் என்று மனதில் வருபவைகளை மாம்சத்தில் பேசுவீர்களாகில் மாபெரும் தீர்ப்பை அடைய வேண்டியதிருக்கும். ஆசாரியப் பாகை உங்களை விட்டு எடுபட்டுப் போகும்.

ஆகவே

உண்மையைப் பேசுங்கள்

செய்வதையே பேசுங்கள்





முகஸ்துதி பேசாதீர்கள்

வார்த்தைகளால் வருத்தப்படுத்தாதீர்கள்

இறுமாப்பாய் பேசாதீர்கள்

மாம்சீகத்தில் பேசாதீர்ககள்

பொல்லாதோரை நல்லோரென்று

சொல்லாதீர்கள்.

வேத வசனத்தை வளைத்துப் பேசாதீர்கள்.

**உங்கள் உதடு அறிவைக் காத்திடல் வேண்டும். அது அழகு மொழி செப்பிடுதல் வேண்டும். தேனும் பாலும் உதட்டில் வடிதல் வேண்டும். உற்றாரும் உங்களை அழைத்தவரும், உங்கள் பேச்சினால் உவகை கொள்ளுதல் வேண்டும்.**

# 5

# ஆசாரியனும் வேதமும்

வேதத்தை அவன் வாயிலே தேடுவார்கள். ஆம் ஆசாரியனின் வாயிலிருந்த வேதம் நதியைப் போல் பெருக்கெடுத்து ஓடி வெளி வர வேண்டும். கர்த்தர் தந்தவேதம் நமது இருதயத்தில் எப்போதும் நிறைந்திருக்க வேண்டும்.

நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து வேத வசனங்களில் தேறினவராக இருந்தார். 12–வது வயதில் பாண்டியத்துவம் பெற்ற அறிஞர்களோடு தேவாலயத்தில் பேசினது மாத்திரமல்ல தனது ஊழியத்தின் துவக்கத்தில் சாத்தான் அவரை சோதிக்க வந்தபோது தெளிவான வசனங்களை மேற்கோள் காட்டி மும்முறையும் சத்துருவுக்கு பதிலடி கொடுத்தபடியால் அவன் சத்துவம் இழந்து சத்தம் கொடுக்காமல் ஓடி விட்டான்.

ஆசாரியர்களே நீங்கள் வாய் திறந்து பேசும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேத வசனத்தை கையாள வேண்டும். அதிலே பெரிய வெற்றியே பொதிந்திருக்கிறது. தேவன் தமது சகலபிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் தமது வசனத்தை மகிமைப்படுத்தியிருக்கிறார் என்று வேதத்தில்எழுதப் பட்





டிருக்கிறபடியால் தேவ வல்லமை நம்மில் வெளிப்படும்படியாய் வேத வசனங்களை அள்ளி வீசவேண்டும்.

இன்றைக்கு உலகப் பிரகாரமான காரியங்களை பேசியே காலத்தை ஓட்டி விடுகிறோம். அது மாபெரும் தவறு நயமான பேச்சுக்களும் நகைச்சுவைகளும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றேயாயினும் அவைகள் பிரதானமானவைகள் அல்ல. ஆசாரியர்களிடத்தில் மக்கள் அவைகளை எதிர்பார்க்கவில்லை. அவைகளுக்கு உலக சந்தையில் பல வித்தகர்கள் இருக்கிறார்கள்.

இன்றைய அளவில் கலப்படமில்லாத, களங்கமில்லாத ஞானப்பாலாகிய திருவசனத்திற்காகத்தான் வறண்ட மனுக்குலம் வாட்டத்துடன் காத்திருக்கிறது. இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் தொடர்ந்து 3 நாட்கள் கூட்டம் நடத்தி பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், ஆகாரத்தைப்பற்றிக் கூட யோசிக்காமல் அமர்ந்திருக்க மக்களின் ஆத்துமப் பசியை சற்று சிந்தனை செய்து பாருங்கள்.

ஒவ்வொரு ஆசாரியனும் ஜீவ வசனத்தைப் பொழிகிறவனாக இருத்தல் அவசியம். மணவாட்டியன் உதட்டின்கீழ் தேனும் பாலும் வடிகிறது என்று உன்னதப் பாட்டில் சொல்லப்பட்டுள்ள இந்த இரண்டு உவமைச் சொல்களும் திருவசனத்தைத்தான் குறிக்கிறது. ஆம் தேனிலும் தெளிந்த தேனிலும் திவ்ய மதுரமானது என்றும் களங்கமில்லாத ஞானப்பால் என்றும் தன்னைக் குறித்தே வேத வசனம் சாட்சி கொடுக்கிறது.

உங்களுக்குள்ளே நீங்கள் ஜெயம் பெற்றவர்களாய் வாழவேண்டுமானால் உங்கள் உதட்டின் விளிம்பில் வசனம் நிற்க வேண்டும். சாத்தான் இயேசுவை பல்வேறு சோதனைக்குள் நடத்தியபோது எழுதியிருக்கிறதே

எழுதியிருக்கிறதே என்று சரியான வசனங்களை மேற்கோள் காட்டியதால் எவ்வித சோதனையிலும் எந்தவித பங்கமில்லாமல் ஜெயமெடுத்தார்.

ஜெயமெடுப்பது மாத்திரமல்ல நீங்கள் செவ்வையான சுபாவத்தையும் சிறந்த ஆவிக்குரிய அனுபவத்தையும் உடையவர்களாய்த் திகழவேண்டுமாயின் திருவசனத்தை ஆராய்ந்து கற்கிறவர்களாய் இருத்தல் அவசியம். பெரோயா சபையார் வேதத்தை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயா சபையாரைப் பார்க்கிலும் நற்குண சாலிகளாயிருந்தார்கள் என்பதை கவனித்துப் பாருங்கள்.

நற்குணங்கள் உண்டாவது மாத்திரமல்ல நம்மை அழைத்தவரை புரிந்து கொள்வதற்கும் அவரில் நாம் நித்தியமாய் நிலைத்திருக்க நம்மை தகுதிப்படுத்துவதும் அவரின் வசனங்களே. வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பவைகள் அவைகளே. அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.

ஜெயம், நற்குணம், நித்திய ஜீவன் இவைகள் மாத்திரந்தானா? நமது வழியில் இடறாமல் செல்ல தீபமாய், விளக்காய் உள்ள இத்திருவசனத்தை அல்லும் பகலும் தியானிக்கிற மனுஷன் ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருப்பான் என்று முதலாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறதல்லவா

வேத வசனங்களை ஆதாரமாகக் கொண்டே சாட்சிகளை சொல்ல வேண்டும், பிரசங்கமும் செய்ய வேண்டும். கட்டுக் கதைகளையும் பயணக்கதைகளையும் கதைக்கக்கூடாது. இயேசுகிறிஸ்து உயிர்த் தெழுந்த பின்பு எம்மாவூர் சீஷர்களுக்கு வேத வசனங்களையே விளக்கினார். அதனால் அவர்கள் உள்ளம் கொழுந்து விட்டு எரிந்தது. எழுப்புதலும் பிறந்தது.





இன்றைய சபைகளின் நிலை என்ன? ஊழியர்களின் நிலை என்ன? ஆசாரியர்கள் ஆடலரசர்களாய் மாறி விட்டனர். எழுப்புதல் வரும் போது ஆட்டம் வருமே தவிர, ஆட்டம் வருவதினால் எழுப்புதல் வந்துவிடாது, திருவசனம் மாத்திரமே நிலையான எழுப்புதலை உண்டாக்கும்.

பின்மாறிப்போன சீஷர்களுக்கு இயேசுகிறிஸ்து வசனத்தை விளக்கினார், அதனால் அங்கு எழுப்புதல்அக்கினி பிறந்தது. பெந்தகொஸ்தெ நாளில் அப்போஸ்தலனாகிய பேதுரு, யோவேல் தீர்க்கதரிசன நிறைவேறுதலை வசனத்தின் ஆதாரத்தோடு பிரசங்கித்தார். அதனால் அங்கே எழுப்புதல் பிறந்தது அத்தோடு ஆத்தும அறுவடை 3000 த்தையும், 5000த்தையும் தொட்டது.

தனிமனிதனாகிய கந்தாகே என்பவளின் மந்திரிக்கு பிலிப்பு வசனத்தை விளக்கினார், அங்கே எழுப்புதல் பிறந்தது. குடும்பமாய் காத்திருந்த பட்டாளத்தலைவன் கொர்நெலியு வீட்டில் பேதுரு வசனத்தை விளக்கினார். அங்கே எழுப்புதல் பிறந்தது.

வசனம் எங்கே விளம்பப்படுகிறதோ, விளக்கப்படுகிறதோ, விரும்பப்படுகிறதோ அங்கேதான் எழுப்புதல் கருவாகி, உருவாகி, திருவாகிறது. ஆயிரம் பிரசங்கத்தைக் காட்டிலும் ஒரு அற்புதமே மிக முக்கியம் என்று அற்புத விரும்பிகள் அறிக்கை செய்கிறார்கள். அதை நான் ஆமோதிக்கிறேன்.

எனது முந்திய புத்தகங்களின் மேற்கூறிய கருத்துக்களை அவசியமென்று அழுத்தமாக எழுதியிருந்தேன். ஆனால இன்றைய எனது கேள்வி வித்தியாசமானது. ஆயிரம் அற்புதங்கள் செய்து மனந்திரும்புதலுக்கென்று ஒரு வசனத்தையும் மக்களுக்கு அறிவிக்காவிட்டால் நமக்கு லாபமென்ன? மக்களுக்கென்ன

லாபம்? ஆண்டவருக்குத்தான் என்ன லாபம்? மோசமான நிலை ஏற்பட்டுவிடும்.

கர்த்தர் சீஷர்களோடு இருந்து கிரியை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களினால் வசனத்தை உறுதிப்படுத்தினார் என்று மாற்கு 16:20– இல் வாசிக்கிறோம். இங்கே ஒரு காரியத்தைக் கவனியுங்கள் இவ்வசனத்தின் முற்பகுதி என்ன சொல்லுகிறது? அவர்கள் புறப்பட்டுப் போய் பிரசங்கம் பண்ணினார்கள். இதுதான் முக்கியம். வேத வசனம் விளம்பப்பட்டவுடன் கர்த்தர் அவர்களோடு கூட கிரியை நடத்த ஆரம்பித்தார். அப்பொழுது சீஷர்களால் அடையாளம் நடந்தது.

இன்றைக்கு அடையாள அற்புதங்கள் குறைவதற்கு முதன்மைக்காரணம் கர்த்தர் நம்மோடு கிரியை செய்வதற்குபதிலாக நாமே நமக்காக கிரியை செய்ய ஆரம்பித்து விடுகிறோம். உதாரணமாக, அற்புத அடையாளங்களை மையமாக வைத்தே கூட்டங்களை விளம்பரப் படுத்துகிறோம். ஜனக்கூட்டத்தை சேர்க்கிறோம். ஆனாலும் பலன் ஏற்படுவதில்லை. வசனத்தை முதன்மைப்படுத்தி பிரசங்கிக்காத எந்த இடத்திலும் கர்த்தர் கிரியை செய்வதில்லை. அடையாளங்கள் நடப்பதுமில்லை.

கிறிஸ்து இயேசு அற்புதம் செய்தது போல் நாமும் செய்யமுடியும் – செய்யவும் வேண்டும். ஆகிலும் இயேசு அற்புதம் செய்ததற்கு காரணம் என்ன? அற்புதம் செய்வதற்கு முன்பு என்ன செய்தார்? என்பதனைக்கண்டு கொள்ள வேண்டியது அவசியம்.

இயேசு அற்புதம் செய்ததற்கு காரணம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள அல்ல. தான் கண்ட ஜனங்களுக்காக மனதுருகினார். எனவே அற்புதம்





செய்தார், இயேசு எங்கெல்லாம் மனதுருகினாரோ அங்கெல்லாம் அற்புதம் நடந்தது. (மத்தேயு 9 : 36; 14 : 4, மாற்கு 1 41....) சீஷர்கள் தாங்களாகவே அற்புதம் செய்யவில்லை. அவர்களோடு கிரியை நடப்பித்து அவர்களால் அடையாளங்கள் வெளிப்பட தேவனே கிரியை செய்தார், எதற்கு? அவர்கள் ஊழியத்தை உறுதிப்படுத்திக் கொள்ள அல்ல. திருவசனத்தை உறுதிப்படுத்தவே.

எனவேதான் இயேசுகிறிஸ்துவும் அப்போஸ்தலரும் முதலில் ஆத்துமத்திற்கு வசனத்தை – வார்த்தையாகிய விசுவாச விதையை கொடுத்தார்கள். அங்கு அற்புதங்கள் அதைத் தொடர்ந்து வந்தது.

ஆசாரியனே அடையாள அற்புதம் உன் மூலமாய் நடக்க வேண்டும் என்று நீ விரும்புவது நியாயமானதே ஏன் அப்படி நடக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்ற கேள்வியை கேட்க விரும்புகின்றேன். திறந்த மனதுடன் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம். உங்களைக் கொண்டு நடத்த வேண்டுமென்ற அடையாள அற்புதங்களை உங்கள் உடன் சகோதரர் அல்லது உடன் ஊழியர் மூலம் கர்த்தர் நடத்த வேண்டுமென்று மனப்பூர்வமாய் சொல்லமுடியுமா? ஜெபிக்க முடியுமா? ஆம் என்றால் நிச்சயமாகவே உங்களைக் கொண்டும் அற்புதங்கள் செய்வார். திருவசனத்தை ஜாக்கிரதயாயப் பிரசங்கம் பண்ணுங்கள்.

இல்லையென்று பதில் வருமானால் உன் உள்ளத்தில் கள்ளத்தனம், வியாபாரத்தனம் குடிகொண்டிருக்கின்றது என்று அர்த்தம். அது உன்னை கொள்ளைகொண்டு போவதற்கு முன்பு அந்த ஆசையை தூக்கி வெளியே எறி அல்லாவிட்டால் ஆவிக்குரிய உலகைவிட்டு நீ தூக்கியெறிப்படுவாய்.

அற்புத அடையாளம் தன்னைக் கொண்டு மாத்திரம்

நடக்கும் – நடக்கவேண்டும் என்று நினைத்தவர்கள் அடையாளம் தெரியாத அளவிற்கு அழிந்துபோனார்கள். ஆசாரியனே உன் உதட்டில் வேதம் வெளிப்படட்டும். சகலப் பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் இராஜா தமது வசனத்தை மகிமைப்படுத்தியிருக்கிறார் என்ற திருவசனத்தின்படி நீங்கள் பிரசங்கிக்கும் போது கர்த்தர் அற்புதங்களை நிகழ்த்துவார்.

கோவை மாநகரிலே திராவிடக்கழகத்தினர் ஒரு கூட்டம்போட்டார்கள். விளம்பரம் எப்படித் தெரியுமா? குருடர்கள பேசுகிறார்கள் ஊமையர் பார்கிறார்கள் (சரியாய்ப் படியுங்கள்) இதில் என்ன அற்புதம் இருக்கிறது. பின்னே ஏன் அப்படிப்போட்டார்கள் செவிடர்கள் கேட் கிறார்கள் குருடர்கள் பார்க்கிறார்கள். என்று விளம்பரம் போட்டும் செல்லுபடியாகாத கூட்டங்களை இடித்துக் காட்டவே.

நாம் என்ன செய்யவேண்டும்? திருவசனத்தை பேசவேண்டும் வேதத்தை எதிர்க்க இந்த உலகத்தில் எவர் உண்டு, எதிர்த்தவனெல்லாம் எடுத்தான் வேதம் என்ற நிலையைத்தவிர வேதம் என்றைக்கும் தலை குனிந்ததில்லை. அது ஆறுதலின் வசனம் அது தேவனிடம் வழிநடத்தும் ஜீவவசனம் அந்த வசனங்கள் உள்ளான மனிதனில் கிரியை செய்தால் புறம்பான மனிதனில் அற்புதங்கள் தன்னில்தானே அரங்கேறும்.

ஊழியராகிய ஆசாரியரே உங்கள் உதடுகளில் எந்நேரமும் வேதம் வெளிப்பட வேண்டும். அதிலும் சபை நடத்தும் ஊழியர் மிகுந்த – தெளிந்த – செறிந்த வேத அறிவுடையவர்களாய் இருத்தல் அவசியம். உங்கள் ஞாயிறு ஆராதனைச் செய்திகள் முற்றிலும் புதுப்பிக்கப்பட்ட வல்லமையாய் வேதத்தின் மகத்துவங்களை அடக்கியதாக இருக்கவேண்டும்.





பல்வேறு அலசடிகளில் அகப்பட்ட ஆத்துமாக்கள் ஆலயத்தைத் தேடி ஆவலாய் ஒடிவரும்போது அழுது வடியும் பிரசங்கத்தை செய்து அனுப்பிவிடக்கூடாது. சோர்ந்துபோன எலியாக்களை சுறுசுறுப்பாக்கும் சூடான அப்பங்களாய், விடாய்த்துப்போன யோனத்தான்களின் கண்களைத் தெளிவிக்கும் தேன்துளிகளாய், களைத்துப் போன சிம்சோன்களுக்கு ஜீவரட்சண்யத்தை உண்டாக்கிய எந்தக் கோரிகளாய் நமது பிரசங்கம் அமைந்திருத்தல் அவசியம்.

நமது ஆலயங்கள் தெருவோர சிற்றுண்டிச் சாலையின் விளம்பரப்பலகையில் உள்ளபடி, இட்டிலி – சாம்பார், பூரி – மசால் என்ற கணக்கில் வாடிக்கையான அட்டவனை பிரசங்கமல்ல, பிள்ளைகளின் நிலையறிந்து தேவையறிந்து பசிக்கேற்ற ருசியுடைய புதுப்புதுப் பண்டங்களை உருவாக்கும் தாயினைப் போல் ஆசாரியன் பிரசங்கங்களை ஆயத்தம் செய்தல் அவசியம்.

ஆராதனை வேளையில் போதுமான பாடல்களை பிரசங்கத்திற்கு முன்பே பாடிவிடுங்கள். சில ஆசாரியர்கள் பிரசங்கவேளையில் பாட்டுப்பாடியே பாதி நேரத்தைக் கடத்திவிடுகிறார்கள். இப்பொழுது பாட்டுக்கேசட் நிறையவே கிடைக்கிறது. அவைகளை வீட்டில் போட்டுக் கேட்டுக் கொள்வார்கள். ஜீவவசனங்கள், சோர்ந்த ஆத்துமாவிற்குத் தேற்றும் வார்த்தைகள். வளரும் ஆத்துமாக்களுக்கு புஷ்டியான ஆகாரம். இப்படித் தேடி வரும் பலவித ஆத்துமாக்களுக்கு ஏமாற்றம், தடுமாற்றம் உருவாகாமல் பார்த்து வேத வசனத்தை போதியுங்கள்.

யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டது போல் என்ற பழமொழிக்கு ஒப்ப தாகத்தோடு வரும் மக்களுக்கு வெறும் சகேயு கதையும் பர்திமேயு கதையும் சொல்லி அனுப்பி விடக்கூடாது. வனாந்தரத்தில் மக்கள் பசியாறி மீதியான துணிக்கை எடுத்தது போல நமது பிரசங்கத்தைக் கேட்

கும் மக்கள் முதலில் தாங்கள் பெலப்பட்டு அடுத்தவர்களையும் தேற்றும் மக்களாய் மாறும் வண்ணம்கொழிக்கும் ஆகாரத்தை செழுமையாய்த் தருதல் வேண்டும்.

இது எப்படி சாத்தியமாகும்? இருதயப் பொக்கிஷசாலையில் ஏராளமான வசனங்களைத் தேக்கி வைத்திருந்தால் இஃது சாத்தியமானதே. ஆசாரியனாகிய எஸ்றா கற்றுக் தேர்ந்த வேத பாரகனாயிருந்தான் என்று வாசிக்கிறபடியே (எஸ்றா 7 : 6) ஒவ்வொரு ஆசாரியனும் வேதத்தைக் கற்றத் தேர்ந்தவராக இருத்தல் அவசியம்.

திருச்சபையின் போதகர்களாகிய ஆசாரியர் எஸ்றாவைப் போல் கற்றுத் தேர்ந்தவராய் இருப்பதுடன். மக்களுக்குத் தேவையான புதிதும் பழையதுமான வேத விளக்கங்களை விளம்பிடுதல் வேண்டும். இன்னும் சிறப்பாக சொல்ல வேண்டுமானல் அழைக்கப்பட்ட, சபையின் சொந்த ஆசாரியரே உங்கள் ஞாயிறு காலை ஆராதனைகளில் நீங்கள் தான் தூது அளிக்க வேண்டும். உங்கள் ஆடுகளின் நிலை உங்களுக்கல்லவோ புரியும்.

விசுவாச மக்கள்ஆறு நாள் வேலை செய்து ஏழாவது நாளிலே (கர்த்தருடைய சமூகத்தில்) ஒய்ந்திருக்கிறார்கள். ஊழியர்களோ ஆறு நாள் (கர்த்தருடைய சமூகத்தில்) ஓய்ந்திருந்து ஒரு நாள் வேலை செய்கிறோம். அந்த ஒரு நாளையும் சரியாய்ச் செய்யாமல் யாரையாவது அழைத்து ஆராதனையில் பேச வைத்தால் அது நியாயமா? அது தேவ சித்தமா? சபைக்கு பக்திவிருத்தியைக் கொண்டு வருமா? சற்று யோசியுங்கள்.

நமது சபைக்கு செய்தி கொடுக்கும்படி பல பரிசுத்தவான்களை அழைப்பதில் தவறில்லை. ஆனால் சபைகாவலனாகிய ஆசாரியன் தனது வசன ஊழியத்தை அசதியாய் செய்து கொண்டு வசதியான வாடகைப் பிரசங்கிமார்களை வைத்து ஆராதனை நடத்துவது





தேவசித்தமில்லை. மேய்ப்பருக்குரிய, போதகருக்குரிய அழைப்பை பெறாதவர்கள் ஞாயிறு காலை, சபையில் செய்தி கொடுப்பது தேவ சித்தமில்லை. சிலருக்கு வருத்தம் ஏற்படலாம். ஆகிலும் பலருக்கு திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதற்காக திறந்த மனதுடன் எழுதுகிறேன்.

வாரம் ஒரு பிரசங்கியை அழைத்து பிரசங்கம் செய்யவைத்து, வரும் காணிக்கையில் ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டு மீதம் இருப்பதை வைத்து நமது விருப்பம் போல் இருக்க, நாம் ஆவிக்குரிய ஏஜன்ஸி நடத்தவில்லை மாறாக தேவனுடைய சரீரமாகிய சபையை தலையாகிய கிறிஸ்துவின் வளர்ச்சிக்குத்தக்க பரிபூரணத்துக் குள்ளாக்கும் வேலையில் இறங்கியிருக்கிறபடியால் வசன ஊழியத்தை முதன்மைப்படுத்தி, தகுதிப் படுத்திக் கொண்டு தயார் படுத்திக் கொண்டு நமது மக்கள் முன்னிலையில் வந்து நிற்க வேண்டும். காரணம் மக்கள் உங்கள் வாயில் வேதத்தைத் தேடி வந்திருக்கிறார்கள்.

ஊழியரானாலும் விசுவாசியானாலும் மற்றவர் முன்பு வசனத்தைப் பேசும்போது கவனமாகப் பேசுதல் வேண்டும். நாம் கொடுக்கும் விளக்கங்கள் வேத வசனத்தின்படி சரியாக இருக்கிறதா? அப்படி சரியாக இருப்பது போல் தோன்றினாலும் அது உண்மைதானா? என்று ஆராய்ந்து பேசுதல் வேண்டும். நூதன விளக்கங்களை நுழைக்கக்கூடாது. சிலர் சில கேள்விகளை வேத வசனத்திலிருநது எழுப்பலாம். அதற்கு விடை தெரிந்தால் சொல்லுங்கள். தெரியாவிட்டால் சில பரிசுத்தவான்களிடம் கேட்டறிந்து சொல்லுங்கள். அப்படி சொல்ல முடியாவிட் டால் தெரியாது என்ற தைரியமாக சொல்லுங்கள்.

சிக்கலான கேள்விகளை பலர் கேட்கும் போது வழவழப்பான பதில்களை சொல்லாதிருங்கள். தெரியாது என்று சொல்வதினால் நமது கௌரவம் காற்றில் போய்விடாது. மாறாக ஞானி என்று எண்ணி மூளையிலிருந்து விளக்கங்கள் கொடுக்கவேண்டாம்.

ஒரு பிரசங்கியார் அபிரகாம் ஈசாக்கைப் பெற்றான். ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான் என்று வரிசையாய் வம்ச வரலாற்றை சொல்லிமுடித்து, அந்தக்காலத்தில் ஆண்கள் தான் பிரசவித்தார்கள். முதன்முதலில் இயேசு கிறிஸ்துவை மரியம்மாள் பிரசவித்தார்கள். என்று அதிநவீன அறிக்கை ஒன்றை வெளியிட்டாராம். இதை என்னவென்று சொல்வது.

நாய்களுக்கு எச்சரிக்கையயிருங்கள். இந்த வசனத்திற்கு ஒரு போதகர் அந்நாட்களில் அந்த பிலிப்பி பட்டணத்தில் வெறிநாய்கள் இருந்தது. எனவே விசுவாசிகள் ஜாக்கிறதையாயிருக்கும்படி பவுல் அறிவுறுத்தினார் என்று விளக்கம் கொடுத்தபோது எனக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை.

இப்படிப்பட்ட அதிமேதாவித்தனமான விளக்கங்களைத் தவிர்த்து அதன் உண்மை சூழலை உணர்ந்து மக்களுக்கு பிரசங்கிக்க வேண்டும். சில பகுதிகள் நமக்கு புரிந்தாலும் நமக்கு முன் இருப்பவர்களுக்கு அவ்வேளையில் அது பயனில்லையென்றால் அதைப் பற்றிப் பேசக் கூடாது. பேசவேண்டிய அவசியமுமில்லை.

வேதவசனங்களை எடுத்தால்வதிலும் கவனம் தேவை. மொட்டை தலைக்கும் முழுங்காலுக்கும் முடிச்சுப் போடும் வேளையில் இறங்கி விடாதீர்கள். ஒரு வசனத்தை எடுத்துக் கொள்ளும்போது அதின் முன் பின் வசனங்களை சேர்ந்தே தியானம் செய்து விளக்கம் கொள்ள வேண்டும். ஒரு அதிகாரத்தில் அல்லது வசனத்தில் ஒரு பகுதியை மாத்திரம் தனியே எடுத்து விளக்க முற்படுவதால் இன்றைக்கு கள்ள உபதேசங்கள் மலிந்து விட்டது. ஆசாரியரே திருவசனத்தை மிகக்கவனமாக கையாளுங்கள்.

எந்த மொழிவேதமானாலும் அதன் மொழி பெயர்ப்பின் தரம் ஒரு வரையறைக்கு உட்பட்டதே. எனவே சரியான, விரிவான புரியும்படியான கருத்தை வெளிக்கொணர மற்ற மொழி (பெயர்ப்பு) வேதங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள், அப்படி செய்தால் நீங்கள் கூடுதல் பலனைக் காண்பீர்கள்,





உங்கள் வசனத்தைக் கேட்பவர்களை சரியான வழிக்குள் நடத்துவீர்கள்.

எனவே எனது முதல் புத்தகமாகிய வளமான பிரசங்கியின் முதற்பதிப்பில் குறிப்பிட்ட, சில குறிப்புகளை இங்கு மீண்டும் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். நமது தமிழ் வேதாகமத்தில் (ஏசாயா 10 : 27) கடைசிவரி.

'அபிஷேகத்தின் நுகம் முறிந்து போகும்' என்று இருக்கிறது. இதன் அடிப்படையில் நீங்கள் பேச ஆரம்பித்தால் அர்த்தம் அனர்த்தமாக மாறிவிடும். அதே வசனத்தை ஆங்கிலத்தில் ஒப்பிட்டுப்பாருங்கள்.

The yoke shall be destroyed . Because of the anointing. (அபிஷேகத்தினால் நுகம் முறிந்து போகும்) எத்துனை நேர்த்தியாக இருக்கிறது பார்த்தீர்களா!

அதைப்போலவே சங்கீதம் 94 : 13–ஆம் வசனத்தில் சிட்சித்து உம்முடைய வசனத்தை கைக் கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான் என்று எழுதப் பட்டுள்ளது. ஆனால் மேற்கூறிய வசனம் ஆங்கில வேதாகமத்தில் வேறுவிதமாய் (சரியாய்) எழுதப் பட்டுள்ளது.

கர்த்தாவே நீர் சிட்சித்து உமது பிரமாணத்தைக் கொண்டு நீர் போதிக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் 94 : 13 English)

இப்படி பல உதாரணங்களை எழுதிக் கொண்டே போகமுடியும். எனவே நாம் புரிந்து கொள்வதற்கும் நம்மைக் கேட்கிற மக்களுக்குப் புரிய வைக்கிறதற்கும் வளமான வேத அறிவு பெற்றவர்களாக இருக்க மற்ற மொழி (பெயர்ப்பு) வேதங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் நல்லது.

தமிழ் வேதாகமம் தமிழர்களுக்கே கூட புரியாமல் இருப்பது வேதனைக்குரியது 91–ஆம் சங்கீதம் 4–ஆம் வசனத்திலுள்ள அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேட்கமுமாம் என்ற பகுதியினை வாசித்து பரிசை என்றால்

என்ன? கேடகம் என்றால் என்ன ? என்று கேட்ட போது பெரும்பான்மையான இடங்களில் கேடகத்திற்கு விளக்கம் கொடுத்த விசுவாசிகள் பரிசை என்பதற்குப் பொருள் தெரியாமல் வியப்போடு பார்த்தனர். சில இடங்களில் ஊழியர்கள் கூட உளற ஆரம்பித்தனர் இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து மீள சரியான விளக்கம் பெற மாற்று மொழி வேதங்களை ஒப்பிட்டுப் படியுங்கள்.

இஸ்ரவேலர் நாற்பதாண்டு காலம் வனாந்தரத்தில் யாத்திரை செய்தபோது மன்னாவைப் புசித்தார்கள். ஒரே உணவை நாற்பது ஆண்டுகள் புசித்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்? அது என்னதான் வானத்திலிருந்து இறங்கிய தூதர்களின் அப்பமாக இருந்தாலும் உங்கள் வாழ்க்கையையே வெறுத்துவிடச் செய்யுமல்லவா. ஆனால் இஸ்ரவேலருக்கோ அப்படி ஏற்படவில்லை. கானானின் பலனை புசிக்கிற வரைக்கும் மன்னாவையே சாப்பிட்டார்கள்.

இப்படி அவர்கள் சலிப்பில்லாமல் சாப்பிட்டதற்கு அதை சமைத்தவர்களே காரணம், மன்னா என்ற மூலப் பொருளை வைத்து சில சமயம் அப்படியேயும், சில வேளை இடித்தும், சில நேரம் அரைத்தும், சில நேரம் அவித்தும், புதிய விதங்களில் இஸ்ரவேலரின் குடும்பத் தலைவிகள் சமைத்ததினால் அவர்கள் மன்னாவை மகிழ்வுடன் புசித்தார்கள்.

வேத வசனமும் வானத்திலிருந்து இறங்கிய மன்னாதான். எனினும் ஒரே விதத்தில் எப்பொழுதும் பேசிக் கொண்டிருந்தால் கேட்பவர்கள் சலித்துக்கொள்வார்கள். எனவே ஆசாரியனானவன் மக்கள் மகிழ்வுடன பசியார புதிய பொலிவுடன் வசனத்தை சமைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரே கருத்தைக் குறித்த பல உதாரணங்கள் வேதத்தில் உண்டு. எனவே ஒவ்வொரு முறையும் புதிய உதாரணங்களை எடுத்துப் பயன்படுத்துங்கள். இப்படி செய்ய சரியான முன் ஏற்பாடு செய்து வைத்திருத்தல் வேண்டும்.





வேத புஸ்தகத்தை ஆவியானவரின துணையோடு பல்வேறு நோக்கில் வாசியுங்கள் அது ஒரு மிஷனெரிப் புத்தகம், ஆசீர்வாதப் பெட்டகம், குடும்ப உறவுக்கு வழிகாட்டி, ஜெபத்தின் வழிகாட்டி என்ற பல சிந்தனைகளுடன் வாசித்துப் பாருங்கள். முழு வேதாகமத்திலும் ஒரு மாபெரும் கோர்வை இருப்பதைக் காண்பீர்கள். இப்படி செய்வதினால் உங்கள் வசனத்தைக் கேட்கிற மக்கள் விசாலமான வேத அறிவு பெறுவர். பொதுவான முறையில் வேதத்தை வாசிக்கும் போதும் குறிப்புச் சுவடிகளில் பல்வேறு தலைப்புகளைக் குறித்து வைத்துக் கொண்டு தலைப்புக் கேற்ற வசனங்களை வரிசைப்படுத்திக் குறித்து வைத்து ஜெபித்து தியானியுங்கள். பேசுங்கள். உங்கள் கருத்துக்களும் செய்திகளும் மடை திறந்த வெள்ளம் போல் சமச் சீராக இருக்கும்.

வேத புஸ்தகத்தை வாசிக்கும்போது முக்கிய வசனங்களை அடிக்கோடிட்டு வையுங்கள். மற்றவர்களின் பிரச்சினகளுக்கு ஆலோசனை கூறும் துணை வசனங்களை வேத புஸ்தகத்திலேயே குறித்து வையுங்கள். 24 மணி நேரமும் வேதத்தைக் குறித்துச் சொல்ல, பிரசங்கிக்க ஆயத்தமாயிருங்கள்.

ஆசாரியரே

நீங்கள் வேதத்தை வாசியுங்கள்

நீங்கள் வேதத்தை பேசுங்கள்

நீங்கள் வேதத்தின்படி வாழுங்கள்

கலப்பில்லாமல் பேசுங்கள்

கனிவாய் பேசுங்கள்

கருத்தாய் பேசுங்கள்.

# 6

# ஆசாரியன் கர்த்தரின் தூதன்

ஆசாரியன் கர்த்தரின் தூதன் என்று மல்கியா 2:7–ன் கடைசிப் பகுதியில் தேவ ஆவியானவர் எழுதி வைத்திருக்கிறார். இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் ஆசாரியரே. ஆசாரியராகிய ஒவ்வொருவரும் தேவனுடைய தூதர்களே, எனது அன்புக்குரிய வாசகரே நீங்கள் தேவனுடைய தூதன் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தூதன் என்றவுடன் துள்ளிக்குதிக்காதீர்கள். தூதன் என்ற வார்த்தைக்கு சரியான பொருளைக் காணுதல் அவசியம். வெண்ணுடை, செட்டைகள், பிரகாசமுள்ள முகம் என்று தேவதூதனை (Angle) கற்பனை செய்யாதீர்கள். இங்கே எழுதப்பட்டுள்ள (மல்கியா 2 : 7) தூதன் தூதுவன்(Messenger) எனப் பொருள்படும். ஆம் நீங்கள் தேவனுடைய செய்தியை சுமந்து கொண்டு அவர் சொல்லுமிடத்திற்கு செல்லும் செய்தியாளனாக பூலோகத்தில் செயல்படும் பரலோகத்திற்கான தூதன்.

அமெரிக்கா, ரஷ்யா, போன்ற நாடுகளின் பிரதிநிதியாக இந்தியாவில் தூதரகங்கள் இருக்குமாப்போல் ஒவ்வொரு





விசுவாசியும் ஆண்டவரின் தூதன். அவர் தம் வீடுகளே தூதரகங்கள். இதனை உணர்ந்து அனுபவப்பூர்வமாக நாம் செயல்பட வேண்டியது மிகவும் அவசியம்.

### இருபுறம் சமாதானமுள்ளவர்கள்

தூதுவர்கள் இரண்டு முனைகளிலும் சமாதானம், நல்லுணர்வு உள்ளவர்களாக இருத்தல் அவசியம். தூதை அளிப்பவரிடத்திலும், தூதைப் பெறுகிறவர்களிடத்திலும் நல் இணக்கம் இல்லாதவர்கள் தூதராக இருக்க முடியாது.

எடுத்துக் காட்டாக இந்தியாவில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். P.L.O–வின் தலைவர் யாசர் அராபத் இந்தியாவிற்கு வந்தபோது அப்போதைய பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அம்மையார் அராபத்துக்கு மிகப்பெரிய வரவேற்பையும், நிதி உதவியையும் செய்தார். அதனைக் கண்ணுற்று, அரபுநாடுகளில் பெட்ரோல் உதவிக்காகவே இந்தியா ஒரு பக்கமாக சாய்ந்து ஆதரவு தெரிவிக்கிறது. என்று இந்தியாவிலிருக்கும் இஸ்ரேலிய தூதர் பேட்டி கொடுத்தார்.

அவர் செய்தி கொடுத்த அடுத்த 24மணி நேரத்தில் தூதர் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்று இந்திய அரசு ஆணை பிறப்பித்தது. எனவே அன்று முதல் தூதர் இஸ்ரேலிய துணை தூதர் மாத்திரமே சில காலம் செயல்பட்டு வந்தார்.

நான் இதைக் குறிப்பிடக் காரணம் மனிதரோடும் சமுதாயத்தோடும் நல்லிணக்கம் இல்லாதவர்கள் தேவனுக்காக செயல்பட முடியாது. எல்லா மனிதரோடும் நீங்கள் இயல்பான அன்பில் இருத்தல் அவசியம். அனேக சமயங்களில் நாம் தெய்வீகத் தூதுவர் என்பதை மறந்து தெய்வீகத் தூதன் (Angle) என்ற நினைப்பில் மிதந்து விடுகிறோம். அதனால் தான் தேவனுடைய செய்தியை சரியானபடி மக்களுக்கு சொல்ல முடியவில்லை.

நான் ஒரு முறை பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன். என்னருகில் எனது திருச்சபையைச் சார்ந்த அங்கத்தினர் ஒருவர் மிக நெருக்கமாக உட்கார்ந்து கொண்ருந்தார். நாங்கள் அந்நியோந்நியமாய் பேசிக் கொண்டு வருவதைக் கண்ணுற்ற, எங்கள் முன் இருக்கையில் அமர்ந்திருந்த போதகர் மெதுவாக என் காதில் இஸ்ரவேல் புத்திரனுக்கும் லேவியனுக்கும் எத்தனை அடி இடைவெளியிருக்க வேண்டுமென்று உமக்குத் தெரியுமா? என்று கேட்டார். அதற்கு நான் எனக்குத் தெரியாது. அழிந்து போகிற ஊழியத்தை நான் செய்யவில்லை, மகிமையின் ஊழியத்தை செய்கிறேன். என்னுடைய தலைவர் இயேசுகிறிஸ்து தன்னை எந்த விதத்திலும் தனிமைப்படுத்திக் காண்பிக்க வில்லை சீஷரோடு நெருக்கமாக இருந்தார். யோவான் அவர் மார்பிலே சாய்ந்திருந்தார். ஆகவே எங்களுக்கு மாதிரி இயேசு கிறிஸ்துவே தவிர வேறுயாருமல்ல என்று நறுக்கென்று சொல்லி விட்டேன்.

ஆசாரியரே நீங்கள் மக்களிடம் நெருங்கிப் பழகுங்கள். அத்தோடு ஆண்டவரோடு நெருங்கிப் பழகுங்கள் தூதன் தனது செய்தியை உரியவரிடமிருந்துதான் பெற வேண்டும். மூன்றாம் நபரிடம் பெற்று நான்காம் நபரிடம் ஒப்புவிப்பது தேவ சித்தமல்ல. பத்திரிக்கைகளையும், கேசட் செய்திகளையும் படித்தும் கேட்டும் கர்த்தர் எனக்கு சொன்னார் என்று சொல்வது ஏமாற்று வேலையாயிருக்கும். எண் 27: 26–ஆம் வசனத்தில் ஆசாரியன் கர்த்தருடைய சமூகத்தில் நின்று ஊரீம் தும்மீம் இவைகளினால் தேவ வாக்கை அறிந்து இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்ல வேண்டுமென்று கர்த்தர் சொல்லி இருக்கிறார்.

தேவ தூதர்களும் தேவ தூதுவர்களாய் சில வேளை பூமிக்கு இறங்கி வந்ததாய் வேதம் சொல்லுகிறது





யோவானின் தகப்பனாகிய சகரியாவின் காரியத்தில் காபிரியேல் தூதன் சொல்வதைக் கவனியுங்கள் "**என்று கர்த்தருடைய சமூகத்தில் நிற்கிற நான் சொல்லுகிறேன்.**" ஆம்கர்த்தருடைய சமூகத்தில் நிற்பவரே கர்த்தருடைய தூதன்.

ஆகாபுக்கு முன்பு நின்ற எலியா "என் வார்த்தையே அன்றி மழை பெய்யாது என்று கர்த்தருடைய சமூகத்தில் நிற்கிற நான் சொல்லுகிறேன்." என்று சொல்லுவதைக் கவனியுங்கள். **கர்த்தருக்கு முன்பாய் நிற்காதவர்கள்தூதுவராக முடியாது. மனிதரோடு நல் இணக்கம் இல்லாதவர்கள் தூதுவராக செயல்பட முடியாது.**

## அனுப்பினவரை மகிமைப்படுத்துங்கள்

தூதுவன் தன்னை அனுப்பினவரை மகிமைப்படுத்த வேண்டும். இது முக்கியமான ஒன்று, தன்னை அனுப்பின வரை மகிமைப்படுத்துவதே தூதனுக்குரிய இலட்சணம். அருள் நாதர் இயேசு கிறிஸ்துவும் பரலோகத் தூதுவராக பூலோகத்திற்கு இறங்கி வந்த போது தன்னை அனுப்பின வரை மகிமைப்படுத்துவதையே பிரதான நோக்கமாய்க் கொண்டிருந்தார்.

இன்றைய தூதுவர்களிடம் மிகவும் பரிதாபமான நிலை காணப்படுகிறது. முதலில் பொதுப் பெயரால் ஆரம்பிக்கப்படும். ஊழியங்கள் இந்த 20–ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் தனி மனிதர்களின் சொந்தப் பெயராலே அழைக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் அற்புதக் கூட் டங்களுக்கு பதிலாக தனி நபரின் பெயரை முன்னே போட்டு அற்புதக் கூட்டங்கள் என்று போடுவது எந்த விதத்தில் சரியானது என்று எனக்குப் புரியவில்லை.

ஆபிரகாமின் வீட்டில் நடைபெற்ற ஒரு சம்பவம் எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ஆதியாகமம் முந்தின

அதிகாரங்களில் ஆபிரகாம் வீட்டு விசாரணைக் கர்த்தன் எலியேசர் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் ரெபேக்காளைப் பெண் கேட்கப் போன ஆபிரகாமின் தூதன் எலியேசர் என்று யூகிக்க முடிகிறதே தவிர வெளிப்படையாக பிந்தின அதிகாரங்களில் எழுதப்படவில்லை. அந்த அளவிற்கு தூது சுமந்து கொண்டு சென்றவர் தன்னை முழுவதுமாக மறைத்து விட்டார். தன்னைக் குறித்து அறிமுக வார்த்தை சொல்லும்போது (ஆதி 24 : 34) நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன் கர்த்தர் என் எஜமானை ஆசீர்வதித்திருக்கிறார் என்று தன் எஜமானை உயர்த்திக் காண்பிக்கிறார். அந்த அதிகாரம் முடியும்வரை அந்தத் தூதன் யார் என்ற பெயரே வெளியிடப்படவில்லை.

அன்புக்குரிய ஆசாரியரே! உங்கள் பெயரை பிரஸ்தாபப்படுத்தவோ, உங்கள் பெயரை நிலைப்படுத்தவோ எக்காரணத்தைக் கொண்டும் நீங்கள் முயற்சி செய்யாதிருங்கள். தூதனானவன் தன்னை அனுப்பினவருக்கு உண்மையாயிருக்கும் போது தேவனே அவனை உயர்த்துவார். ஊழியர்களே நீங்கள் அமைதலாய் அடங்கியிருக்கும்போது அப்படி செய்வீர்களானால் கர்த்தரே உங்களை மேன்மைப்படுத்துவார். அவர் உன்னை மேன்மைப் படுத்தியிருக்கிறார் என்று ஏசாயா 55:5–இலும் உன் பெயரை பெருமைப் படுத்துவேன் என்று ஆதி 12 : 2–இலும் கர்த்தர் எழுதி வைத்திருப்பதை கருத்தில் கொள்ளுங்கள் கவனமாயிருங்கள். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்துப்படுவான்.

## தன்னை அனுப்பினவரின் வேலையை மாத்திரம் செய்ய வேண்டும்.

எழுத்தின்படியும் ஆவியின்படியும் தூதன் எதற்காக அழைக்கப்பட்டானோ, அனுப்பப் பட்டானோ அந்த வேலையை மாத்திரம் செய்ய வேண்டும். தூதை சுமந்து கொண்டு சொந்தப் பிரச்சினை, சொந்த வேலை யாரும் செய்யக் கூடாது. ஊழியரோ விசுவாசிகளோ எவரானாலும் தங்கள் இருப்பிடத்தை விட்டு எந்தக் காரியத்திற்காகப்





புறப்படுகிறோமோ அதே வேலையில் முழு மூச்சாக செயல்பட வேண்டும். ஒரு கல்லின் இரண்டு மாங்காய் என்ற குறுக்கவழி தூதருக்கு இருக்க கூடாது. ராஜாவின் செய்தியை சுமக்கும் தூதுவர்கள் காலம் கடப்பதற்கு முன்னே செய்தியை உரியவரிடத்தில் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் குற்றவாளிகளாக நிற்க வேண்டிய நிலை ஏற்படும்.

II இராஜாக்கள் 7–ஆம் அதிகாரம் 9–ஆம் வசனத்தை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். குஷ்டரோகிகளுக்கு ஒரு தூது கிடைக்கிறது. சீரியரின் இராணுவம் ஓடிவிட்டது. ஏராளமான பொருட்கள் பாளயத்தில் இருக்கிறது. இதுதான் தூதுக்குரிய செய்தி. இந்தத் தூதை இராஜஅரண்மனைக்குச் சொல்ல வேண்டும். நேரமோ இரவு நிலையோ குஷ்டரோகம் இரண்டும் கெட்டான் நிலை. ஆனால் அவர்களின் நிலை என்ன? காலம், சூழல், இவைகளை மீறி மனச்சாட்சி துடிக்கிறது. பொழுது விடியுமட்டும் தாமதித்தால் நம்மேல் குற்றம் சுமரும் என்று அங்கலாயித்து இருட்டையும் பாராமல் தீட்டையும் பாராமல் ஒட்டமாய் ஒடினார்கள். மனசாட்சியுள்ள அந்த நாலு குஷ்டரோகிகளின் தூதினால் நாள் ஒன்று கடப்பதற்குள் கர்த்தரின்வாக்கு நிறைவேறிற்று. கர்த்தர் மகிமைபட்டார்.

எனக்கன்பானவர்களே! நாம் குஷ்டரோகிகள் அல்ல நமது அப்பா தமது இரத்தத்தினால் பாவரோகங்களிலிருந்த நம்மை விடுதலையாக்கியுள்ளார். இது இராக்காலமல்ல. திறந்தவாசல் அடைபடாத பகற்காலம். நமக்கோ மேலான வருகையின் தூது, சமாதானத் தூது, மகிழ்ச்சியின் தூது என்று பல செய்திகள் உண்டு. ஆனால் மனசாட்சி துடிக்கவில்லை. மௌனிகளாயிருக்கிறோம். எனது காரியமாக யாரை அனுப்புவேன் என்று ஆண்டவர் அங்கலாய்த்த போது தூதனாக செல்ல ஏசாயா தன்னை அர்ப்பணித்தார். இஸ்ரவேல் காத்தரிடம் திரும்பியது. தெய்வ பிள்ளையே நீ கர்த்தரின் தூதன். தேவ செய்தியை கருத்தாய் நீ சுமந்து சொல்லா விட்டால் நீ அவரின்

நாளில் குற்றவாளியாக நிற்பாய். கால தாமதம் செய்யாதே.

மொர்தெகாய் எஸ்தருக்கு சொன்னதையே உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்கு இந்தத் தூதை சொல்லாவிட்டால் இந்தியாவிறகு இரட்சிப்பு வேறிடத்திலிருந்து வரும் நீ காலமெல்லாம் இரத்தப் பழியினை சுமப்பாய்.

கர்த்தரின் ஊழியத்தின் மிகப் பெரிய அபாயம் தாமதம் உங்களுடைய தாமதம் தேவ சித்தத்தைத் தகர்க்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. உங்களது உத்தரவாதத்தை மறந்து அறியாத மக்களுக்கு நற்செய்தி எனும் தூது காலத்தே எடுத்துச் செல்லாவிட்டால் நீங்களே தேவனுடைய எதிரி, வேதம் என்ன சொல்லுகிறது தெரியுமா? தன் வேலையில் அசதியாயிருக்கிறவன் அழிம்பனுக்கு சகோதரன் (நீதி மொழிகள் 18 : 9)-ஆம் நீங்கள் அசதியாய் ஊழியம் செய்வீர்களாகில், சத்தானின் உடன் பிறப்பாயிருப்பீர்கள்.

வேதத்தில் மிருக ஜீவன்கள் கூட தங்களின் தூதுவத்தை செவ்வையாய் செய்திருக்கிறது. பேதுரு மூன்று முறை மறுதலித்த போது உடனே சேவல் கூவிற்று. அதற்குக் கொடுத்த உத்தரவாதத்தில் தனது உண்மையை வெளிப்படுத்தியது. யோனாவைக் கடலில் போட்டார்கள். கர்த்தரால் ஆயத்தமாக்கப்பட்டிருந்த மீனோ அவனை விழுங்கிற்று. இந்த இரண்டு மிருகங்களும் சுமார் 15 நிமிடம் தாமதித்திருக்குமானால் நினிவேயின் இரட்சிப்பும், பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு மூலம் இரட்சிக்கப்பட்ட 3000 பேரின் நிலையும் கேள்விக் குறியான ஒன்றாய் இருந்திருக்கும்.

**இழிவான ஆதாயத்தை தூதன் தேடக்கூடாது**

முழு நேர ஊழியர்கள் மிகவும் கவனமாய் இருத்தல் வேண்டும். அறுவடை மிகுதி ஆளோ இல்லை என்று சபையார் பாடிக் கொண்டிருக்க பொதுத்தொண்டு செய்கிறேன் என்று மக்களுக்கு லோன் வாங்க கலெக்டர்





அலுவலகத்துக்கு முன்பு ஊழியர்கள் நிற்கக் கூடாது. கல்லூரியில் இடம் வாங்கித் தருகிறேன், வேலை வாங்கித் தருகிறேன் என்று பணம் வாங்கித் தரும் இடைத் தரகர் வேலையில் ஈடுபடக் கூடாது.

எனது நண்பரொருவர் அவசரமாக போய்க் கொண்டிருந்தார். இடையில் அவரை நான் சந்திக்க நேரிட் டது. எங்கே போகிறீர் என்றேன். ஒரு திருமண பேச்சு வார்த்தைக்காகப் போகிறேன் என்றார். உமது சபையார் அல்லாத ஒருவருக்கு பேச்சுவார்த்தைக்காக நீர் போகிறீரே என்ன விஷயம் என்றேன், ஒன்றுமில்லை வரும் வரதட் சணையில் தசமபாகத்தை எனக்குத் தருவதாக வாக்குச் செய்துள்ளார். அதனால் தான் போகிறேன் என்றார்.

இதை எழுதவே எனக்குக் கை கூசுகிறது. ஆனால் எழுதத்தான் வேண்டும். இழிவான ஆதாயத்தைத் தூதன் தேடக் கூடாது. தூதனுக்குக் கடமை முக்கியம். அஃதினை கண்ணியத்தோடும் சுயக்கட்டுப்பாட்டோடும் செய்ய வேண்டும். அஃதினை மீறும்போது அழைப்பை இழக்க நேரிடும்.

உங்கள் சபை மக்களுக்கு ஆவிக்குரிய தகப்பன் என்ற நிலையில் உதவி செய்யும் பொருட்டு சில காரியங்களில் ஈடுபடலாம் உதவலாம், அது நன்று. ஆகிலும் இதையே தொழிலாக்கி கட்சிக்காரர்கள் போல லோன் மேளா கொண்டாடக் கூடாது.

அதுமட்டுமல்ல யோவான் ஸ்நானகனைப்பாருங்கள் அவனுக்குக் கொடுக்கப்பட்ட வேலை என்னவோ அதை மாத்திரமே செய்தான். ஸ்தீரிகளிடத்தில் பிறந்த இந்த யோவான் எந்த விதமான அற்புதம் நிகழ்த்தாமலே சென்றான் என்பது மிகுந்த ஆச்சரியமாக இருந்தாலும் தூதுக்குரிய இலட்சணம் இதுதான்.

தேவையில்லாத வேலைகளில் ஊழியங்களில் தலையிட வேண்டாம். உங்களுக்கு அருளப்பட்ட வேலையை

செய்யுங்கள். தேவன் சொன்னதை சொன்னபடியே செய்யுங்கள். அப்பொழுது ஆசீர்வதிக்கப் படுவீர்கள. ஆகவே பிரியமுள்ள சேனைகளின் கர்த்தரின் தூதர்களே **நீங்கள்**

- ☆ மக்களோடும் மகேசனோடும் சமாதானமாயிருங்கள்.
- ☆ உங்களை அழைத்தவரை மகிமைப் படுத்துங்கள்.
- ☆ அழைக்கபட்ட வேலையை மாத்திரம் செய்யுங்கள்.
- ☆ இழிவான ஆதாயத்தை விரும்பாதேயுங்கள்.
- ☆ அற்புதங்கள் அல்ல. ஆண்டவரின் சித்தமே செய்யுங்கள்.

கடைசியாகப் பிரியமானவர்களே!

நீங்கள் உன்னதமான தேவனுடைய ஆசாரியர்கள், நீங்கள் உலகத்தாருக்கு முன்பு சாதாரணமானவர்கள் போலக் காணப்பட்டாலும் நீங்கள் தேவனுக்கு முன்பாக விசேஷமானவர்கள். தமது மகிமையான இரட்சிப்பின் திட்டத்தில் உங்களுக்கு முக்கியமான பொறுப்புகளை அவர் தந்துள்ளார்.

ஆகவே உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொண்டு அதில் வளருங்கள். அறிவாய் நடந்து கொள்ளுங்கள். வேத வசனத்தின் படி நடவுங்கள். வேதத்தை பிரஸ்தாபப்படுத்துங்கள். நீங்கள் தெய்வீகத் தூதுவர்கள். வறண்டு கிடக்கும் மனுக்குலத்திற்கு வல்லமையோடும் வாஞ்சையோடும் வசனத்தைத் தூதாய் சுமந்து செல்லுங்கள். **வல்ல தேவன் தமது வருகையில் வாடாத கிரீடத்தை வழங்குவார்.**



## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,
**Pr. அலெக்ஸ் தினகரன்**

## ஆசிரியரின் நூல்கள்

1. வளமான பிரசங்கி
2. ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது?
3. என் தாசனாகிய யோபு
4. இயேசு கிறிஸ்துவும் அந்திக்கிறிஸ்துவும்
5. ஆத்தும ஆதாயம் செய்வது எப்படி?
6. இயேசு வந்த வீட்டில்!
7. ஆசாரியனின் உதடுகள் (நிறுத்தப்பட்டது)
8. காலங்களும் யுகங்களும்
9. பயனுள்ள பிரசங்கக் குறிப்புகள்
10. இயேசுவின் வருகை எங்கே? எப்போது? எப்படி?
11. தேனும் பாலும்
12. தானியேல் தீர்க்கதரிசியும், தீர்க்கத் தரிசனமும்
13. பரிசுத்த ஆவியும் பற்பல பாஷையும்
14. திருச்சபையைக் கட்டி எழுப்புவது எப்படி?
15. சத்தியமாவது என்ன?
16. ஆக்கில்லா பிரிஸ்கில்லாள்
17. எஸ்தர்
18. என் தாசனாகிய தாவீது
19. மூன்று முற்பிதாக்கள்
20. நெகேமியா
21. நான் உன்னை விடுவிப்பேன்
22. பேயோரின் குமரனாகிய பிலேயாம்
23. அப்போஸதலனாகிய பவுல்
24. இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை
25. கோதுமை மணியாகிய ஸ்தேவான்
26. நீங்கள் இராஜரீக ஆசாரியர்கள்
27. என் தாசனாகிய மோசே
28. குணசாலியான ரூத்
29. மகிமையின் கூடாரமும் மறைந்துள்ள சத்தியங்களும்
30. முதலாம் உயிர்த்தெழுதலும் ஆயிரமாண்டு அரசாட்சியும்.